பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 217

புதன்கிழமை
02 ஜூலை 2025

ஆனி 18 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

புதன்பொய்கை

## பேருந்துக் கட்டணம் 0.55 வீதம் குறைப்பு

விரிவு பக்:- 15

செம்மணிப் புதைகுழியில்

# பின்னிப்பிணைந்தபடி ஏராளமான சிதிலங்கள்!

எண்ணிக்கையைக் கணக்கிடுவதில் சிக்கல்



யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ்ப்பாணம் – செம்மணிப் புதைகுழியில் நேற்றைய அகழ்வின்போது, ஒன்றுடன் ஒன்று பிணைந்த நிலையில் பல்வேறு சிதிலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதனால், என்புக்கூடுகளின் எண்ணிக்கையைக் கணக்கிட்டு அறிவிப்பதில் சிக்கல்நிலை ஏற்பட்டுள்ளது. 15



## புதைகுழிக்குள் பொம்மை!

யாழ்ப்பாணம், ஜூலை 2

செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் நேற்று சிறுகுழந்தைகளின் விளையாட்டுப் பொம்மையொன்று மீட்கப்பட்டுள்ளது. 15

செம்மணிப் புதைகுழி தொடர்பான

## அனைத்து வழக்குகளும் இணைக்கப்பட வேண்டும்

பாதிக்கப்பட்ட தரப்பினர் வலியுறுத்து நடவடிக்கை மேற்கொள்ளவும் முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 2

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான முன்னைய வழக்கையும், தற்போதைய வழக்கையும் நீதிமன்றத்தில் இணைந்து அழைப்பது தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று சட்டத் 15

கிருஷாந்தி கொலை வழக்கின்

## சட்டமருத்துவ அதிகாரி பெரேரா செம்மணியில் அனுபவப்பகிர்வு!

யாழ்ப்பாணம், ஜூலை 2

கிருஷாந்தி கொலை வழக்கில் சட்டமருத்துவ அதிகாரியாகச் செயற்பட்ட கிளிபோர்ட் பெரேரா, செம்மணிப் புதைகுழிப் பகுதிக்கு நேற்றுச்சென்று தனது அனுபவத்தைப் பகிர்ந்தார்.

தற்போது அகழ்வுப் பணிகளை மேற்கொள்பவர் 15

## இலங்கைக்கு எதிராக பரஸ்பர வரி விதிப்பு

அமெரிக்க அதிபர் விடாப்பிடி

கொழும்பு, ஜூலை 2

உலக நாடுகளுக்கான வரிச்சலுகைகள் மேலும் நீடிக்கப்பட வாய்ப்பில்லை என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

உலக நாடுகளுடனான தனது 15

## தமிழரசுக் கட்சியின் மன்னார் மாவட்டக் கிளையின் பொருளாளர் பதவிவிலகல்!

உட்கட்சி முரண்பாடுகள் காரணம்

விரிவு பக்கம்:- 15

## இளைஞரைக் கடத்தி 'ஏ.ரி.எம்.' இல் கொள்ளை

வவுனியாவில் மூவர் கைது!



வவுனியா, ஜூலை 2

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியாவுக்கு வந்து, வவுனியாவைச் சேர்ந்த இளைஞர் ஒருவரைக் கடத்தித் தாக்குதல் நடத்தி, அவரிடமிருந்து பணத்தைக் கொள்ளையிட்ட குற்றச்சாட்டில் மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் - 15

## படையினரைக் காப்பாற்ற ஜெனிவா செல்லத் தயார்

கொழும்பு, ஜூலை 2

ஜெனிவாவில் இடம்பெற்றவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் மாநாட்டில், இலங்கையின் சார்பில் கலந்துகொள்ளத் தயாராக 15

நாடாளுமன்ற உறுப்புரிமை வழக்கில்

## அர்ச்சுனா எம்.பி.யின் சமர்ப்பணம் இன்று!

கொழும்பு, ஜூலை 2

நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் நாடாளுமன்ற உறுப்பினராகத் தொடர்ந்து பதவி வகிப்பதற்கான தகுதியை எதிர்த்து தாக்கல் செய்யப் 15

## கிணற்றில் தவறிவீழ்ந்து குடும்பத்தலைவர் பலி!

யாழ்ப்பாணம், ஜூலை 2

கிணற்றுக் கட்டில் உறங்கிய குடும்பத்தலைவர், தவறுதலாக கிணற்றுக்குள் வீழ்ந்த நிலையில் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் மானிப்பாய் 15

### முச்சந்தி முரளி

'நல்லகாலம் பொம்மைக்கும் உயிர் இருந்தால் அதையும் கொண்டிருப்பாங்கள்'

## தவறான முடிவெடுத்து குடும்பத்தலைவர் பலி

யாழ்ப்பாணம், ஜூலை 2

தவறான முடிவெடுத்து 47 வயதுடைய குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தெல்லிப்பழை பகுதியைச் சேர்ந்த மேற்படி நபர், கடந்த 15

## மின்சாரம் தாக்கியதால் மயங்கிவீழ்ந்த ஊழியர்!

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் மின்கம்பத்தில் ஏறி மின்குமிழை மாற்றும் வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஊழியர், மின்சாரம் தாக்கியதைத் தொடர்ந்து மின்கம்பத்திலேயே மயக்கமடைந்தார்.

நேற்றுக்காலை பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நல்லூர் 15



மக்கள் மயப்பட்ட தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02.07.2025 புதன்கிழமை



| கொவிசெத | |
|---|---|
| திகதி | 01.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4119 |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கங்கள் | 14 25 26 40 |
| விசேட எழுத்து | I |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 01.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1186 |
| வெற்றி இலக்கினம் | ரிஷபம் |
| வெற்றி இலக்கங்கள் | 05 06 37 46 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 01.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 00145 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கங்கள் | 3 9 5 1 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 01.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2225 |
| ஆங்கில எழுத்து | T |
| சுப்பர் இலக்கம் | 15 |
| வெற்றி இலக்கங்கள் | 11 23 43 65 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 01.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5877 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 5 6 9 8 7 7 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 01.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1907 |
| ஆங்கில எழுத்து | O |
| வெற்றி இலக்கங்கள் | 03 04 20 65 |
| விசேட எழுத்து | O |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 01.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0452 |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கங்கள் | 9 8 7 7 |

# கடந்ததை தோண்டுவதைவிட குணப்படுத்த மருந்திடுங்கள்!

## கூறுகிறார் விமல் வீரவன்ஸ

**கொழும்பு, ஜூலை 2**

**செம்மணி புதைகுழியைத் தோண்டி எலும்புக்கூடுகளை எடுத்து கடந்த காலங்களைத் தேடுவதைவிட, எதிர்காலத்தில் இப்படியான சம்பவம் இடம்பெறாமல் இருக்க இதயங்களைக் குணப்படுத்தும் நடவடிக்கையே தற்போது முன்னெடுக்கப்படவேண்டும்.**

இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடக சந்திப்பின் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

செம்மணிப் புதைகுழியின் அகழ்வுப் பணிகள் இறுதி பெறும்வரை எம்மால் தீர்மானமொன்றுக்கு வரமுடியாது. அடுத்தகட்ட அகழ்வுப்பணியின்போது இராணுவத்தின் இலக்கத்தகடு மீட்கப்பட்டால் விசாரணை அடுத்த கோணத்துக்குள் செல்லும். இலங்கை போர் நடைபெற்ற நாடு. புதைகுழி உள்ள இடம் போர் நடைபெற்ற பகுதி. அனைத்துத் தரப்புகளிலும் துப்பாக்கிச்சூடுகள் இடம்பெற்றுள்ளன.

எனவே உயிரிழந்த மக்களின் எலும்புக்கூடுகளை மீட்டு, கடந்த காலம் பற்றி தேடுவதைவிட, எதிர்காலத்தில் இப்படியான சம்பவம் இடம்பெறாத வகையில் இதயங்களைக் குணப்படுத்தும் நடவடிக்கையே இடம்பெறவேண்டும். ஆனால் அந்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மாறாக வைராக்கியமே

விதைக்கப்படுகின்றது. சர்வதேசம் மற்றும் அடிப்படைவாதக் குழுக்களின் நோக்கமும் இதுதான்- என்றார். (ச-44)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 01.07.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | 0585 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கம் | 8 7 9 6 1 2 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 01.07.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2851 |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கம் | 19 27 30 38 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 01.07.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கம் | 43 72 73 75 |
| வெற்றி வாரம் | 5012 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 01.07.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ராசி | துலாம் |
| வெற்றி இலக்கம் | 24 30 53 61 |
| சீட்டிழுப்பு வாரம் | 4563 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 01.07.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | F |
| சுப்பர் இலக்கம் | 21 |
| வெற்றி இலக்கம் | 32 42 54 62 |
| வெற்றி வாரம் | 2027 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 01.07.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கம் | 11 36 37 67 |
| வெற்றி வாரம் | 2677 |

| SASIRI | |
|---|---|
| திகதி | 01.07.2025 |
| தினம் | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | 0716 |
| வெற்றி இலக்கம் | 30 32 37 |

# லாப்ஸ், லிட்ரோ விலையில் மாற்றமில்லை

கொழும்பு, ஜூலை 2

ஜூலை மாதத்தில் லிட்ரோ சமையல் எரிவாயு மற்றும் லாப்ஸ் எரிவாயு விலையில் திருத்தம் மேற்கொள்ளப்படாது என்று அந்த நிறுவனங்களின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதன்படி 12.5 கிலோகிராம் லாப்ஸ் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 4 ஆயிரத்து 100 ரூபாவாகவும் 5 கிலோகிராம் சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை ஆயிரத்து 645 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறது.

அதேவேளை 12.5 கிலோகிராம் லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டர் 3 ஆயிரத்து 690 ரூபாவுக்கும், 5 கிலோகிராம் லிட்ரோ சமையல் எரிவாயு ஆயிரத்து 482 ரூபாவுக்கும் 2.3 கிலோகிராம் லிட்ரோ சமையல் எரிவாயு 694 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றது. (ச-இ)

# நிறைவேற்று அதிகாரத்தை நீக்கவேண்டும் அரசாங்கம்

## வலியுறுத்துகின்றார் ஜனக வகும்புர

கொழும்பு, ஜூலை 2

2024ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்தான் இறுதி நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதித் தேர்தலாக இருக்கவேண்டும் என்று முன்னாள் அமைச்சர் ஜனக வகும்புர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

தற்போதைய அரசு ஆட்சியைக் கைப்பற்றுவதற்காகப் பல வாக்குறுதிகளை வழங்கியிருந்தது. அவற்றுள் ஒன்றுதான் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்குவது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு எதிர்க்கட்சிகளும் ஆதரவு வழங்கும். கடந்த காலங்களில் ஜனாதிபதிப் பதவிகளை வகித்தவர்கள் அனைவரும் இதே வாக்குறுதியை வழங்கினர். ஆனால் நிறைவேற்றவில்லை. தற்போதைய அரசாங்கம் தேவையான சட்ட ஏற்பாடுகளைக்கொண்டு நிறைவேற்று அதிகாரத்தை நீக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் - என்றார். (எ-75)





# ம. உ. ஆணைக்குழுவால் பொலிஸாருக்கு செயலமர்வு!

யாழ்ப்பாணம், ஜூலை 2

சித்திரவதையால் பாதிக்கப்பட்டோருக்கு ஆதரவளிக்கும் சர்வதேச தினத்தை முன்னிட்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண அலுவலகத்தால் விழிப்புணர்வு செயலமர்வு நடத்தப்படவுள்ளதாக யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

இந்த விழிப்புணர்வு செயலமர்வு யாழ்ப்பாணம், காங்கேசன்துறை மற்றும் கிளிநொச்சி பொலிஸ் பிரிவுகளில் கடமையாற்றும் உயர் பொலிஸ் அதிகாரிகளுக்காக இன்று மு.ப. 9 முதல் 12.30 வரை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையக் கேட்போர் கூடத்தில் நடத்தப்படவுள்ளது. இந்த விழிப்புணர்வு செயலமர்வில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் பிரதான வளவளராகக் கலந்துகொண்டு கருத்துரை வழங்கவுள்ளார். (ச-27)

# பிரபாகரனைக் காப்பாற்ற மறுத்ததால் மஹிந்த இலக்கு

## சரத் வீரசேகர புதிய கதை

கொழும்பு, ஜூலை 2

மேற்குலகம் தன்னைக் காப்பாற்றுமென பிரபாகரன் இறுதிவரை நம்பி இருந்தார். அதற்கு மஹிந்த ராஜபக்ச இடமளிக்காததாலேயே அவரை மேற்குலகம் இலக்குவைத்துள்ளது என்று முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

போரை நிறுத்துமாறு இறுதிக்கட்டம்வரை மேற்குலக நாடுகள் மஹிந்த ராஜபக்சவுக்கு அழுத்தம் கொடுத்தன. அதற்கு அவர் அடிபணியவில்லை. போரைத் தொடர்ந்து முன்னெடுத்தார்.

காப்பாற்றப்படுவீர்கள் என்ற உத்தரவாதத்தை பிரபாகரனுக்கு மேற்குலகம் வழங்கி இருந்ததால் கடைசி இரு மணிநேரம்கூட அந்த நம்பிக்கை பிரபாகரனுக்கு இருந்தது. புலிகளின் உரையாடல்களை நாம் கண்காணித்திருந்தோம். அதன்மூலம் இந்த விடயம் தெரியவந்தது.

பிரபாகரனைக்காப்பாற்றமுடியாமற்போனது மேற்குலகுக்கு பலத்த அடி மற்றும் வெட்கமாகும். அன்றிலிருந்துதான் மஹிந்த ராஜபக்ச இலக்குவைக்கப்பட்டு, ஆட்சி மாற்ற முயற்சி எடுக்கப்பட்டது - என்றார். (எ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜ் ஜுவல்லர்ஸ்
தங்க நகை அடகு சேவை
வட்டி வீதம் குறைக்கப்பட்டுள்ளது
1 பவுண் 22 கரட்டிற்கு
220000/-
அடகுக்காலம் ஒரு வருடம்
இல. 59 ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி சந்தைக்கு அருகில்
021 221 7287, 076 636 1238

# காணிகளை விடுவித்தால் பாதுகாப்புக்குக் குந்தகம்

## சரத் வீரசேகர கொக்கரிப்பு

**கொழும்பு, ஜூலை 2**

**வடக்கில் 95 சதவீதக் காணிகளை எமது ஆட்சியின்கீழ் விடுவித்துவிட்டோம். எஞ்சியவற்றைத் தற்போது விடுவிப்பது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவே அமையும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய பாதுகாப்பை சில்லறைத்தனமாகக் கருதக்கூடாது. தேசிய பாதுகாப்புக்கே கூடுதல் முக்கியத்துவம் வழங்கப்படவேண்டும்.

பாதுகாப்பு நிமித்தமே பலாலி விமான நிலையத்தைச்சூழ பாதுகாப்பு வலயங்கள் உருவாக்கப்பட்டன. தற்போது பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்பட்டுவருகின்றன. இராணுவ முகாம்கள் நீக்கப்பட்டுள்ளன. இராணுவ வீதித்தடைகள் தளர்த்தப்பட்டுள்ளன. தமிழ்ப் பிரிவினைவாத அரசியல்வாதிகளின் ஆதரவைப்பெறுவதற்காக தேசிய பாதுகாப்பைப் பணயம் வைக்கக்கூடாது. எமது ஆட்சியின் கீழ் படைகள் வசம் இருந்த தரணிகள் மற்றும் வீடுகளில் 95 சதவீதமானவை மீளக் கையளிக்கப்பட்டன. பாதுகாப்பு நிமித்தமே எஞ்சிய 5 சதவீதம் வைக்கப்பட்டன. வழங்கக்கூடிய உச்சத்தை வழங்கிவிட்டோம். எனவே, எஞ்சியதை வழங்க முற்படுவது தேசிய பாதுகாப்பை பூஜ்ஜிய நிலைக்குக் கொண்டுவரும் நடவடிக்கையாகும் - என்றார். (ச-44)

# இனவாதத்துக்கு இடமேயில்லை

## அநுர ஆணித்தரம்



கொழும்பு, ஜூலை 2

எந்தச் சூழ்நிலையிலும் இனவாதத்தை மீண்டும் தலைதூக்க அனுமதிக்கப்படாது என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கல்னேவ மகாவலி விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சில அரசியல் குழுக்கள் அதிகாரத்தைக் கைப்பற்ற இனவாதத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்துகின்றன.

இனவாதத்தை நிராகரித்து தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். தற்போதுள்ள சட்டங்கள் அதற்குப் போதுமானதாக இல்லாவிட்டால், சட்டங்கள் வலுப்படுத்தப்பட்டு இனவாதம் தோற்கடிக்கப்படும்.

அத்துடன், சிங்களவர்கள், தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் அனைவரும் ஒன்றாக வாழும் ஒரு சமூகத்தை உருவாக்குவதே அரசாங்கத்தின் நோக்கம் - என்றார். (ச-இ)

# 600 பஸ்கள் மீளிணைப்பு

கொழும்பு, ஜூலை 2

600 பேருந்துகள் பழுதுபார்க்கப்பட்டு மீண்டும் சேவையில் சேர்க்கப்படவுள்ளன எனப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

அத்துடன், பணியாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திட்டம் பிரதமரின் துணைக்குழுவின் அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதேவேளை மேலும், இலங்கைப் போக்குவரத்து சபை பேருந்துகளின் எண்ணிக்கையை அதிகரிக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)




**கே**ள்விச் செவியன் ஊரைக் கெடுத்தான் எண்டுறது உண்மை போலதான் கிடக்குது. செம்மணியில என்ன நடக்குது எண்டு தெரியாமல் அறைக்குள்ள குந்திக்கொண்டு பேஸ்புக்கிலையும், ரிக்ரொக்கிலையும் வாற விசயங்களைப் பார்த்து அதுதான் உண்மையெண்டு நம்பிற சிலதுகள் எல்லாத்தையும் நாசமாக்கிக்கொண்டிருக்குதுகள். மட்டக்களப்பில இருக்கிற வீட்டுக்கட்சியின்ர சாணக்கியமான சண்டித்தன எம்.பி. இஞ்சை என்ன நடக்குதெண்டே தெரியாமல் ஊடகச் சந்திப்பொண்டு வைச்சு உளறிக்கொட்டியிருக்கிறார். செம்மணியைப் பற்றிக் கதைச்சால்தான் இப்ப எடுபடுமெண்டு சாணக்கியமான எம்.பி.க்கு நல்லாத் தெரியும். ஆனால் இஞ்ச என்ன நடக்குதெண்டுதான் அவருக்குத் தெரியேலை. அதாலதான் 'அங்க கூடாரம் போடுப்படேலை, சி.சி.ரி.வி. கமெரா பூட்டுப்படேலை, புத்தகப்பையை ஒளிக்க வெளிக்கிட்டவை' எண்டு வாயில வந்ததையெல்லாம் சொல்லியிருக்கிறார். ஆனால் உந்தப் புதைகுழியைத்தோண்ட வெளிக்கிடேக்கையே அங்க சிசிரிவி கமெரா பூட்டியாச்சு. தற்காலிகக் கொட்டகைகளும் அங்க எப்பவோ போட்டாச்சு. அதைவிட புதைகுழிக்குள்ள மழைத்தண்ணி போகாதமாதிரியான ஏற்பாடுகளும் செய்திருக்கினம். அதைவிட புத்தகப்பையை அங்க இருந்து ஒளிக்கச் சொல்லி ஆரும் சொல்லேலை. அது சாணக்கியமான எம்.பி. வழக்கமாச் சொல்ற கற்பனையில் கலந்த சோதிக்கதையளில இதுவும் ஒண்டுதான். 33 எலும்புக்கூடுகளை ஒளிக்காமல் உந்தப் புத்தகப்பையையோ ஒளிக்கப் போயினம்?

இப்பிடித்தான் புதைகுழியைத் தோண்டுறவை எலும்புக்கூடுகளுக்கு முன்னால சிரிச்சுக் கதைச்சு பம்பலடிக்கினம் எண்டு ஒரு படம் உலாவினது. ஒருபக்கம் சுடலைக்குள்ள சவம் எரியிற புகை நாத்தத்தையும் சகிச்சுக்கொண்டு, இப்பிடி காலுக்கு கீழ மறைஞ்சிருக்கிற எலும்புக் கூடுகளுக்கு சேதாரம் வராமல் பக்குவமா அதைத் தோண்டிக் கொண்டிருக்கிற அவையின்ர கஷ்டம் இப்பிடி ஒரு போட்டோவைப் போட்டு கேவலப்படுத்திறவைக்குத் தெரியுமோ? நாங்களெல்லாம் வீட்டில படுத்திருந்தபடி 'இண்டைக்கு இத்தினை எலும்புக்கூடு மீட் பாம்' எண்டு கிரிக்கெட் ஸ்கோர் மாதிரிச் சொல்லிக்கொண்டிருக் கேக்க, அங்க நிக்கிற பணியாளர்கள்தான் சாப்பிடக்கூட நேரமில்லாமல் தோண்டிக்கொண்டே இருக்கினம். அதொண்டும் தெரியாமல் அவை புத்தகப்பையை ஒளிக்கினம், பூரிப்போட சிரிக்கினம் எண்டு நொட்டை சொல்லி, அதையே சனத்தையும் உண்மையெண்டு நம்பப்பண்ணிக் கொண்டிருக்கினம். ஆனால் உண்மை வேற.

இப்பிடித்தான் இன்னொரு எம்.பி.க்கு செம்மணியின்ர வரலாறே தெரியாமல் பார்லிமெண்டில வெளுத்து வாங்கியிருக்கிறார். 'கிருஷாந்திக்கு குழந்தை இருந்ததாம், அந்தக் குழந்தைக்கு முன்னாலதான் அவாவை பின்னேரம் 4 மணியில இருந்து இரவு 11 வரைக்கும் ரேப் பண்ணினதாம், சாகேக்க கூட தன்ர பிள்ளையைக் கட்டிப்பிடிச்சபடி செத்தவாவம். அந்த எலும்புக்கூடுதான் இப்ப மீட்டதாம்' எண்டு அந்த எம்.பி. அரைவேக்காட்டுத்தனமா பார்லிமெண்டில உரையாற்றி இருக்கிறார். ஆனால் கிருஷாந்தி கலியாணம் கட்டேலை எண்டதும், அவா பள்ளிக்கூட மாணவி எண்டதும், குழந்தையைக் கட்டிப்பிடிச்சபடி எந்தவொரு எலும்புக்கூடும் இப்ப மீட்கப்படேலை எண்டதும் அந்த எம்.பி.க்கு தெரியாது போல. அவரும் கேள்விச் செவியர்தான், அவருக்கும் பேஸ்புக், யூரியூப்தான் உலகம் எண்டதால, அதில ஆரோ 'ஏ.ஐ'ல செய்துபோட்ட எலும்புக்கூட்டை வைச்சுக்கொண்டு கிருஷாந்தி பற்றித்தானே ஒரு கதையை அவிட்டு விட்டிருக்கிறார். இப்பிடி விசயமே தெரியாமல் இல்லாததும் பொல்லாததும் சொல்லுறவையால உண்மையான விசயம் எது, பொய்யான விசயம் எது எண்டு தெரியாமல் செம்மணி விவகாரமே மடை மாறப்போகுது கண்டியளோ.

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய

**மேடம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். சகோதரர்கள் உங்களிடம் ஆலோசனை கேட்டுவருவார்கள். சிலருக்கு அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். மாலையில் உற்சாகமாகக் காணப்படுவீர்கள். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும்.

**இடபம்:** புதிய முயற்சிகள் எதுவும் வேண்டாம். ஒரு சிலருக்கு வெளியூர்களில் இருக்கும் கோயில்களைத் தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும். மாலையில் குடும்பத்துடன் உறவினர், நண்பர்கள் வீட்டுக்குச் சென்றுவருவீர்கள். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஒத்துழைப்புத் தருவார்.

**மிதுனம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். மனதுக்கு மகிழ்ச்சிதரும் சம்பவம் நடைபெறும். உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும், சுபச் செலவாக இருக்கும் என்பது ஆறுதல் தரும்.

**கடகம்:** தேவையான பணம் கையில் இருப்பதால் உற்சாகமாக இருப்பீர்கள். சிலருக்கு தாய்வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். வாழ்க்கைத்துணை வழியில் மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு நவீன டிசைனில் ஆடை வாங்கும் வாய்ப்பு ஏற்படும். உங்கள் தேவையறிந்து நண்பர் செய்யும் உதவி மகிழ்ச்சிதரும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:**. எதிர்பாராத செலவுகள் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சிலர் கடன் வாங்கவும் நேரிடும். மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் அவசியம். வெளியில் செல்லும்போது கைப்பொருள்களைப் பத்திரமாக வைத்துக்கொள்ளவும். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை.

**துலாம்:** இன்றைக்கு எதிலும் நிதானமாகச் செயற்படவும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண்விவாதம் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.


**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றி பெறும் நாள். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி உறவினர்கள் வருகையால் வீட்டில் உற்சாகம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும்.

**தனுசு:** தந்தையின் தேவையைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் சென்றுவரும் வாய்ப்பு ஏற்படும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் மறையும். மாலையில் பள்ளி, கல்லூரிக்கால நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள்.

**மகரம்:** பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்ற முயற்சிசெய்யவும். உறவினர்கள் வருகையால் திடீர்ச் செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். சிலருக்குக் குடும்பத்துடன் கோயிலுக்குச் செல்லும் வாய்ப்பு ஏற்படும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். தாயிடம் கேட்ட உதவி கிடைக்கும். உடல்நலனில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பாராத செலவுகளுடன் தேவையற்ற அலைச்சலும் ஏற்படக்கூடும். சிலருக்கு திடீர்ப்பயணங்களும் அதனால் ஆதாயமும் உண்டாகும்.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தினர் உங்கள் யோசனைக்கு முக்கியத்துவம் தருவார்கள். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.



காரைநகர் அருள்மிகு சிவகாமி அம்பிகா சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் ஆலய வருடாந்தத் திருவிழாவின் ஏழாம் நாள் திருவிழாவை முன்னிட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை சிதம்பரேஸ்வரர் சிவகாமி அம்பிகை சமேதராக வெளிவீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். (ச-41-100)

# குருபூஜை

யாழ்ப்பாணம், ஜூலை 2

ஈழத்துச் சித்தர் அருளம்பல சுவாமிகளின் 100ஆவது குருபூஜைதின நிகழ்வு ஆனி அத்தம் நன்னாளான நாளை வியாழக்கிழமை காலை 9மணி முதல் கீரிமலையில் நகுலேச்சரத்துக்கு வடகிழக்கில் முத்துமாரி அம்மன் ஆலயத்துக்கு அருகில் அருளம்பல சுவாமிகளின் குருநாதர் குழந்தைவேல் சுவாமிகளின் நாமத்தோடு விளங்கும் சிவாலயத்தி லிலுள்ள சுவாமிகளின் சமாதி கோவிலில் இடம்பெறவுள்ளது. மதியம் அன்னதானம் இடம்பெற்று அதன்பின்னர் சுவாமிகளின் நூல் வெளியீடு, நினைவுப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கல், 100ஆவது ஆண்டைக் குறிக்கும் வகையில் சித்தர் பீடத்தில் 100 மரக் கன்றுகள் நடுகை என்பன நடைபெறவுள்ளன. (ச-41-66)

# அபிவிருத்திப் பணிகளுக்கு அனுமதி பெறவேண்டும்!

## சாவகச்சேரி நகரசபையில் தீர்மானம்

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் வடிகாலமைப்பு, வெள்ள நீர் வடிந்தோடல் அமைப்பு உள்ளிட்ட பணிகளை சபையின் அனுமதியின்றி மேற்கொள்ளக் கூடாது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி நகராட்சிமன்றத்தின் கன்னி அமர்வு நேற்றுமுன்தினம் தவிசாளர் வ.ஸ்ரீபிரகாஸ் தலைமையில் இடம்பெற்றது. உறுப்பினர்கள் அறிமுகத்துடன் ஆரம்பமான நிகழ்வில் செம்மணியில் படுகொலை செய்யப்பட்ட உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து பிரேரணைகள் முன்மொழியப்பட்டு தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டன. தென்மராட்சிப் பிரதேசத்துக்கு தீயணைப்பு சேவையை வழங்குவதற்காக சாவகச்சேரி நகரசபையில் தீயணைப்புப் பிரிவை உருவாக்குவதற்கும் தீயணைப்பு வாகனத்தைக் கொள்வனவு செய்வதற்கும் கடந்த சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தைத் தற்போது அமைந்துள்ள புதிய சபை அனுமதித்துள்ளது. (ச-28-9)

# ஆண்டு நிறைவு நிகழ்வுகள்

கொடிகாமம், ஜூலை 2

சாவகச்சேரி சந்திரபுரம் செல்வ விநாயகர் சிக்கனக் கடன் கூட்டுறவுச் சங்கத்தின் 15 ஆவது ஆண்டு நிறைவுவிழா நாளை வியாழக்கிழமை மாலை [illegible].30மணியளவில் சந்திரபுரம் பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. சங்கத்தலைவர் திருமதி வ.சுமதி தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்டக் கூட்டுறவு உதவி ஆணையாளர் கி. சந்திரசேகரன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மா.சி.க.கூ. சங்கத் தலைவர் திருமதி ப.சறோஜினி, கூட்டுறவுஅபிவிருத்திஉத்தியோகத்தர் கே.நிமலறூபன், யா.மா.சி.க.கூ.சங்கச் செயலாளர் திருமதி பு.தயாநிதி, சாவகச்சேரிப் பிராந்திய வெளிக்கள அலுவலர் திருமதி த.உஷா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-41-159)



யாழ்.மாவட்ட

# புதிய மேலதிக செயலராக சிவகரன் பொறுப்பேற்பு

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ்.மாவட்டப் புதிய மேலதிக செயலராக கே. சிவகரன் நேற்று செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் முன்னிலையில் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார். நிகழ்வில் உதவி மாவட்டச் செயலர், பிரதம கணக்காளர், மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர், பிரதம பொறியியலாளர், நிர்வாக உத்தியோகத்தர், மாவட்டச் செயலக அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். மாவட்ட மேலதிக செயலராகக் கடமையாற்றிய க.ஸ்ரீமோகனன் வலுசக்தி அமைச்சின் மேலதிக செயலாளராகப் பதவியுயர்வு பெற்றுச் சென்றுள்ள நிலையில் வேலணைப் பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய சிவகரன் தற்போது மாவட்ட புதிய மேலதிக செயலராகப் பொறுப்பேற்றுள்ளார். (ச-66-9)

# சர்வதேச கூட்டுறவு தினவிழா யாழில்

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ்.மாவட்டக் கூட்டுறவுசபை நடத்தும் 'சிறந்ததோர் எதிர்காலத்தை உருவாக்கும் கூட்டுறவு' எனும் தொனிப்பொருளில் 103ஆவது சர்வதேச கூட்டுறவு தினவிழா எதிர்வரும் 5ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணியளவில் கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. யாழ்.மாவட்டக் கூட்டுறவு சபைத் தலைவர் ப.கேசவதாசன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கூட்டுறவு அபிவிருத்திப் பிரதியமைச்சர் உபாலி சமரசிங்க, சிறப்பு விருந்தினராகக் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமான ந.திருலிங்கநாதன், கௌரவ விருந்தினராக யாழ்.கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் கி.சந்திரசேகரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

வடக்குக் கூட்டுறவு அபிவிருத்தி வங்கிப் பணிப்பாளர் க.சுசீந்திரன் கூட்டுறவு உரையையும், கூட்டுறவு அபிவிருத்தி வங்கித் தலைவரும் யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளரும் சமூக பொருளாதார ஆய்வாளருமான அ.கதிர்காமர் சிறப்புரையினையும் ஆற்றவுள்ளனர். (ச-41-159,17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# போதைக்கு முற்றுப்புள்ளி எப்போது?

வடக்கில் அண்மைய நாள்களில் போதைப் பொருள்களுடன் கைதுசெய்யப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்திருக்கின்றது. குறிப்பாகப் பெண்கள் பலர் கஞ்சா உட்படப் போதைப் பொருள்களுடன் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர். பெருந்தொகையாகக் கைப்பற்றப்படும் போதைப்பொருள்கள் வடக்கில் போதைப் பொருள் வியாபாரம் தடையின்றி நடக்கின்றது என்பதையே வெளிப்படுத்துகின்றன. ஆனால் சிறு வியாபாரிகளைக் கைதுசெய்வது இந்த நிலைமையில் மாற்றத்தை ஏற்படுத்தப்போவதில்லை.

போருக்குப் பின்னர் வடக்கு மாகாணத்தில் போதைப்பொருள் வியாபாரமும், போதைப் பொருள்நுகர்வும் அதிகரித்துள்ளது. இராணுவத்தினராலும், கடற்படையாலும் சூழப்பட்டுள்ள – புலனாய்வாளர்களால் நிரப்பப்பட்டுள்ள – வடக்கு மாகாணத்துக்குள் போதைப்பொருள்கள் எவ்வாறு கொண்டுவரப்படுகின்றன என்பது இன்னமும் மர்மமே. வடக்கு மாகாணத்துக்கு படகுமூலமாகவே பெருமளவு போதைப் பொருள்கள் கடத்தப்படுகின்றபோதும், கடற்படையினர் அவற்றைத் தடுப்பதில் தோல்வி கண்டுள்ளனர். அதேபோன்று வடக்கு முழுவதும் நிரம்பியுள்ள இராணுவத்தினரும், புலனாய்வாளர்களும் போதைப்பொருள் வியாபாரத்தின் சூத்திரதாரிகளைக் கண்டுகொள்ளமுடியாது இருக்கின்றனர் அல்லது கண்டும் காணாது இருக்கின்றனர்.

தற்போதைய அரசாங்கம் போதைப் பொருள் ஒழிப்பைத் தங்களது பிரதான இலக்குகளில் ஒன்றாகக் கொண்டுள்ளபோதும், இதுவரை அதற்காக ஆக்கபூர்வமான செயற்பாடுகளை ஆரம்பிக்கவில்லை. இலங்கைக் கடற்பரப்பில் சட்டவிரோதச் செயற்பாடுகளையும், போதைப்பொருள் கடத்தல்களையும் தடுப்பதற்கு விசேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று அரசாங்கம் தெரிவித்திருந்தபோதும், போதைப்பொருள் கடத்தல்காரர்கள் இன்னமும் சுதந்திரமாகவே செயற்பட்டுக்கொண்டிருக்கின்றனர். நாட்டில் இருந்து போதைப்பொருளை ஒழிக்கவேண்டுமானால் முதலில் போதைப்பொருள்களை நாட்டுக்குக் கொண்டுவரும் மார்க்கங்களை அடைக்க வேண்டியது அவசியம். ஆயினும் அதற்கான காத்திரமான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படுவதில்லை. வடக்கில் தலைவிரித்தாடும் போதைப்பொருள்வியாபாரத்தைத் தடுப்பதற்கு அரசாங்கம் தனிப்பட்ட கவனம் செலுத்தவேண்டியது அவசியம். வடக்குக் கடற்பகுதியூடாக நாட்டுக்குள் கொண்டுவரப்படும் போதைப்பொருள்களைத் தடுப்பதற்கு விசேட நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும். போதைப் பொருள் கொண்டுவரப்படுவதைத் தடுக்காது உள்ளூர் சிறு வியாபரிகளைக் கைதுசெய்வதன் மூலம் எதுவும் மாறிவிடப்போவதில்லை. ஆகையால் அரசாங்கமும், பாதுகாப்புத் தரப்பினரும் போதைப்பொருள் கடத்தல் சூத்திரதாரிகளைச் சட்டத்தின் முன் நிறுத்துவதற்கும், போதைப்பொருள் கடத்தல்காரர்களின் சுதந்திரமான நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் விரைவான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

தொலைவில் தெரிவதைப் பற்றி சிந்திக்காதவனுக்கு துன்பம் அருகில் காத்திருக்கிறது என்பது தெரியாமலே போகிறது.

– கன்பூசியஸ் –





# வேலைவாய்ப்பு விளம்பரத்தை நம்பி மக்கள் ஏமாறவேண்டாம்

## வேலைவாய்ப்புப் பணியகம் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 2

**சமூக ஊடகங்களில் வெளிவரும் போலியான வெளிநாட்டு வேலைவாய்ப்பு விளம்பரங்களை நம்பி ஏமாறவேண்டாம் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் எச்சரித்துள்ளது.**

டுபாயிலுள்ள நபர் ஒருவர் டுபாய்க்கு வேலைக்கு ஆள்களை அனுப்புவதாகவும், டுபாயில் பணிபுரியும் இலங்கையர் சிலரை வைத்து காணொலி தயாரித்து சமூக ஊடகங்களில் வெளியிட்டுள்ளார் என்றும், இது போலியாக எடிட் செய்யப்பட்ட காணொலி எனவும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. அந்த நபரிடம் பணம் கொடுத்து ஏமாந்த சிலர் ஏற்கனவே வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர் என்றும், பதிவுசெய்யப்பட்ட முகவர்களைத்தவிர வேறு எவரும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு விளம்பரங்களை பிரசுரிக்கமுடியாது எனவும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. இந்தப் போலி முகவர் தொடர்பான விசாரணைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. (எ-6)



# அரிசி ஆலை உரிமையாளருக்கு கடன்வசதி

கொழும்பு, ஜூலை 2

அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு விசேட குறுங்கால கடன் திட்டமொன்றை அரசாங்கம் அறிமுகம் செய்துள்ளது. தினமும் 25 முதல் 50 மெற்றிக்தொன் அரிசி உற்பத்தி செய்யும் அரிசி ஆலை உரிமையாளர்கள் இந்தக் கடன் திட்டத்துக்கு அமைய ஐந்து கோடி ரூபா வரை கடனாகப்பெற்றுக்கொள்ளமுடியும். இந்த மாதம் முதலாம் திகதி முதல் நவம்பர் 15ஆம் திகதி வரை இந்தக் கடன் வழங்கப்படவுள்ளது. இந்தக் கடனுக்கு 7 வீத வட்டி அறவிடப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-6)



# ஓட்டோக் கட்டணம் மாற்றமில்லை

கொழும்பு, ஜூலை 2

எரிபொருள் விலை அதிகரித்தாலும், முச்சக்கரவண்டிக் கட்டணம் அதிகரிக்கப்படாது என்று அகில இலங்கை முச்சக்கர வண்டி சாரதிகள் தொழிற்சங்கத்தின் தலைவர் லலித் தர்மசேகர தெரிவித்துள்ளார். எரிபொருள் விலை இதற்கு முன்பு பல சந்தர்ப்பங்களில் குறைக்கப்பட்டபோதிலும், முச்சக்கரவண்டிக் கட்டணம் குறைக்கப்படாததால் அதிகரித்திருக்கும் போது கட்டணத்தை அதிகரிக்கமுடியாது என்றும் அவர் மேலும் கூறினார். (ச-இ)

# கீரிமலை ஜனாதிபதி மாளிகை; காணிக்கு அனுமதிபெறவில்லை

## நகர அபிவிருத்தி அதிகாரசபைத் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 2

யாழ்ப்பாணம், கீரிமலையில் ஜனாதிபதி மாளிகை அமைக்கப்பட்டுள்ள காணிகளுக்கு உரியவகையில் அனுமதிபெறப்படவில்லை என்று நகர அபிவிருத்தி அதிகாரசபைத் தலைவர் குமுதுலால் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஜனாதிபதி மாளிகை அமைக்கப்பட்டுள்ள காணிக்கு சட்டபூர்வ அனுமதிபெறப்படவில்லை. நாம் இந்தக் காணிகளுக்கு சட்டபூர்வ அனுமதியைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். இந்த ஆண்டு இறுதிக்குள் காணிக்குரிய சட்டபூர்வ அனுமதியைப் பெற்றுவிடுவோம். அதன்பின்னர் மக்களுக்குப் பயனுள்ளவகையில் ஜனாதிபதி மாளிகையைப் பயன்படுத்துவோம்-என்றார்.

இந்த ஜனாதிபதி மாளிகை மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவிவகித்த காலத்தில் மக்களின் காணிகளைக் கையகப்படுத்தி 3.5 பில்லியன் ரூபா செலவில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்டது. (எ-6)

# துப்பாக்கிச்சூடு; ஒருவர் பலி

கொழும்பு, ஜூலை 2

கஹவத்தையிலுள்ள வீடொன்றிலிருந்த இருவர் மீது குழுவொன்று துப்பாக்கிச்சூடு நடத்தியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றையவர் காயமடைந்துள்ளார்.

உயிரிழந்தவர் 22 வயதுடையவர் என்றும் மற்றையவர் 27 வயதுடையவர் என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ச-இ)

நாளை

வியாழக்கிழமை - ஆனி 19

03.07.2025

சுபநேரம் : 07.27- 08.57

ராகுகாலம் : 01.27-02.57

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணியில் கொடூரம்; கோரமுகத்தின் வெளிப்பாடு

## நீதிக்காக அனைவரும் ஒன்றிணைக இயக்குநர் கௌதமன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 2

**யாழ்ப்பாணம் செம்மணி சித்துப்பாத்தியில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியானது சிறுபான்மையினர்மீதான அடக்குமுறையின் உச்சம். இந்த ஆதாரங்களானவை கடந்தகால அரசாங்கத்தின் கோரமுகத்தை வெளிப்படுத்துகின்றன என்று இந்திய சினிமா இயக்குநரும் தமிழ்ப் பேரரசுக் கட்சியின் தலைவருமாகிய வ.கௌதமன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் இரண்டாவது கட்ட அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. மீட்கப்பட்ட பல எலும்புக்கூடுகள் கொடூரக் கொலை இடம்பெற்றதை ஆதாரப்படுத்துகின்றன.

யுத்தம் நிறைவுற்று 16 ஆண்டுகள் கழிந்துள்ள நிலையில் காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகள் தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

என்னதான் மூடி மூடி மறைத்தாலும் உண்மைகள் எப்போதும் உறங்காது என்பதற்கு செம்மணிப் புதைகுழி ஒரு நல்ல உதாரணம். கடந்த காலத்தில் மோசடிகளில் ஈடுபட்ட அமைச்சர்களையும் அதிகாரிகளையும் தற்போதைய அநுர அரசு தண்டிக்கிறது. அதனை நாங்கள் வரவேற்கின்றோம். அதேபோன்று இந்த செம்மணிப் புதைகுழி விவகாரத்தில் இனவாதக் கொள்கையை கைவிட்டு துரித விசாரணையை நடத்தவேண்டும். பாதிக்கப்பட்ட எமது தொப்புள் கொடி உறவுகளுக்கு நீதி கிடைக்கவேண்டும். சர்வதேச சமூகங்களும், புலம்பெயர் உறவுகளும், தமிழ்த் தேசியம் சார்ந்த கட்சிகளும் ஓரணியில் நின்று இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தங்களை பிரயோகித்து பாதிக்கப்பட்ட எமது உறவுகளுக்கு நீதி கிடைப்பதற்கு வழி சமைக்கவேண்டும் - என்றார். (ச-27)

**வேலைக்கு ஆட்கள் தேவை**

யாழ். நகரில் இயங்கும் பலசரக்கு கடைக்கு பொருட்கள் பொதி செய்ய மற்றும் இதர வேலைகளுக்கு அனுபவமுள்ள ஆண் வேலையாட்கள் மட்டும் தேவை.
சம்பளம்:2000+300 (மதிய உணவு)
தொடர்புக்கு: 077 628 0685
076 915 8072

# நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றல்

யாழ். மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள நாவாந்துறைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு இலவசமாக விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஒரு நாய்க்கான உரிமக்கட்டணமாக 100 ரூபாய் அறவிடப்படும். இன்று புதன்கிழமை மு.ப.9.00 - மு.ப. 11.00 சேமக்காலை வீதி கெனடி வீதி, மு.ப .11.00-பி.ப. 1.00 மோர் ஜோசப் வீதி ஜன்னா வீதி, பி.ப.2.30-பி.ப.4.00 அண்ணா சனசமூக நிலையம் வசந்தபுரம், நாளை வியாழக்கிழமை மு.ப.9.00 -மு.ப. 11.00 சனசமூக நிலையம் சூரிய ஒளி, மு.ப .11.00-பி.ப. 1.00 சனசமூக நிலையம் சென் நீக்கிலாஸ், பி.ப.2.30 பி.ப.4.00 கோவில் ஒழுங்கை நாவாந்துறை, நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மு.ப. 9.00 மு.ப. 11.00 காதி அபூக்கர் வீதி நாவாந்துறை, மு.ப .11.00பி.ப. 1.00 கலைவாணி சனசமூக நிலையம் கண்ணாபுரம், பி.ப.2.30 பி.ப.4.00 கற்குளம் நாவாந்துறை வெள்ளாந் தெரு நாவாந்துறை, 7ஆம் திகதி மு.ப.9.00 மு.ப. 11.00 சிவன் பண்ணை சீனி வாசகர் வீதிச்சந்தி, மு.ப .11.00பி.ப. 1.00 கோணாந் தோட்டம் யூனியன் வீதி, பி.ப.2. 30 பி.ப.4.00 சோலைபுரம், மண்பிட்டி, 8ஆம் திகதி பி.ப.2.30 பி.ப.4.00 நடமாடும் தடுப்பூசி ஏற்றல் நாவாந்துறை பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவு ஆகிய இடங்களில் தடுப்பூசி ஏற்றப்படும். (ச-41)

**மரண அறிவித்தல்**



**திருமதி இரஞ்சிதம் நித்தியானந்தன்**
(ஓய்வு பெற்ற ஆசிரியை, யா/இந்து மகளிர் கல்லூரி)

உடுப்பிட்டி வடக்கு, கொம்மந்தறையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இரஞ்சிதம் நித்தியானந்தன் அவர்கள் நேற்று (01.07.2025) செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா-அருந்ததியம்மா தம்பதியின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான பகவான்-மங்கையற்கரசி தம்பதியின் அன்பு மருமகளும் நித்தியானந்தன் (ஆயுள்வேத வைத்தியர், மட்டுவில்) அவர்களின் அன்பு மனைவியும், சோபிகா, மிருணிகா (ஆசிரியை, கொ/றோயல் கல்லூரி), துங்கீசன் (4ம் வருட மாணவன், விவசாய பீடம்-யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தாயும், சேகரன் (பொறியியலாளர், CESL), ராகுலன் (Project Manager, ICTA) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், மேருசாயின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற ரஞ்சிதமலர், மனோரஞ்சிதமலர், வனிதாமலர், ரஞ்சிதராணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2025) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 01.00 மணியளவில் ஊரிக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

# வெடியரசனுக்கு வலந்தலையில் சிலை வைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 2

வலந்தலைச் சந்தியில் வெடியரசன் மன்னனுக்குச் சிலை அமைக்க வேண்டும் என்றும் காரைநகர் பிரதேசசபையின் உபதவிசாளர் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

காரைநகர் பிரதேசசபை அமர்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதிலேயே அவர் இவ்வாறு அனுமதிக் கோரிக்கையை முன்வைத்தார்.

வெடியரசன் மன்னன் பல சாதனைகளைப் புரிந்த தமிழ் மன்னன். வெடியரசன் மன்னனுக்குச் சிலை அமைக்க 9 நிதிக் கொடையாளர்கள் முன்வந்துள்ளனர். வலந்தலைச் சந்தியில் சிலை அமைக்க பிரதேசசபை அனுமதி வழங்க வேண்டும் என்று அவர் கோரிக்கை முன்வைத்தார்.

கசூரினாக் கடற்கரையில், நுவரெலியா போன்ற சுற்றுலாத்தளங்களில் உள்ளதைப் போன்று கூடாரங்களை அமைக்க அனுமதி தந்தால் அதற்கான நிதியைப் பெற்றுத்தரமுடியும் என்றும் அவர் தெரிவித்தார். இந்தக் கோரிக்கைகள் தொடர்பாகப் பரிசீலித்த பின்னரே தீர்மானம் எடுக்கமுடியும் என்று சபையின் தவிசாளர் கி.கோவிந்தராசன் பதிலளித்தார். (எ-125)



# மீளவும் உயிர்பெற்றது தந்தை செல்வா சிலை

மன்னார், ஜூலை 2

மன்னார் நகரில் அமைந்திருந்த தந்தை செல்வாவின் உருவச்சிலையின் தலை கடந்த வாரம் இனந்தெரியாத விஷமிகளால் உடைக்கப்பட்டு துண்டாடப்பட்ட நிலையில் குறித்த உருவச்சிலை புனர் நிர்மாணம் செய்யப்பட்டு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளையின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வில் மதத்தலைவர்கள், இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளைத்தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான சாள்ஸ் நிர்மலநாதன், கட்சியின் உறுப்பினர்கள்,மன்னார் நகரசபையின் முன்னாள் தவிசாளர் ஞானப் பிரகாசம் அன்ரனி டேவிட்சன்,நகரசபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-56,26)

# திடீரெனத் தீப்பற்றிய மோட்டார்சைக்கிள்



தென்மராட்சி மந்துவிலில் மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியில் திடீரெனத் தீப்பற்றி எரிந்துள்ளது.

இந்தச் சம்பவம் மந்துவில் மருதடி சனசமூக நிலையத்துக்கு அருகில் கடந்த சனிக்கிழமை நடந்துள்ளது.

வீதியின் குறுக்கே சென்ற மாட்டுடன் மோதுவதைத் தவிர்ப்பதற்காகத் தடுப்பைப் பிரயோகித்தபோது மோட்டார் சைக்கிள் தீப்பிடித்து எரிந்தது என்று கூறப்படுகின்றது. மோட்டார் சைக்கிள் முற்றாக நாசமடைந்துள்ள நிலையில், செலுத்திச் சென்றவரும் இலேசான தீக்காயங்களுக்கு உள்ளாகியுள்ளார். (எ-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவு. மாநகரசபையின் கன்னியமர்வு நேற்றுமுன்தினம்

வவுனியா மாநகரசபையின் முதலாவது அமர்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. செங்கோல் சகிதம் முதல்வர் சபைமண்டபத்துக்கு அழைத்துவரப்பட்டு கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. மாநகர முதல்வர் சு.காண்டீபன் தலைமையில் இடம்பெற்ற அமர்வில் பிரதி முதல்வர் ப.கார்த்தீபன்.



மாநகர ஆணையாளர் தெ.ரதீஸ்வரன் மற்றும் மாநகரசபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். குறித்த கூட்டத்தில் மாநகரில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. (ச-110.18)


## வேலைவாய்ப்பு

ISO தரச்சான்றிதழ் பெற்ற கட்டட நிர்மான நிறுவனத்திற்கு (CIDA Grade C4) பின்வரும் வெற்றிடத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ளவர்கள் தங்களது சுயவிபரக் கோவையை 07 நாட்களுக்குள் கீழ் உள்ள முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

Technical Officer (Civil)
(NCT - Civil/QS, HND - Civil/QS
Two yearsEsperience in Building and Water Supply.

E-mail : vacancynsc@gmail.com
WhatsApp : 0777 120 945

(CS 301921)

## நாஹா மருத்துவ நிலையம்

நீரழிவு நோயினால் வரும் தீவிர தலைச் சுற்றலும், இதயம் தடைப்படல், பாரிசவாதத்திலான மூளைக்கட்டி. இரத்தக் கசிவு, முழங்கால் பாதிப்பு, மூட்டுத் தேய்வு, மாறாத புண்கள், ஆஸ்மா உடனடி நிவாரணம்.

வங்கி முன் லேன், சாந்தாவத்தை, வயிரவர் கோயிலடி, மானிப்பாய்.

T.P: 077 321 2740

## காணி விற்பனைக்கு

கட்டுடை மானிப்பாய் கோவிற்பற்று எழுமுள்ளி ஒழுங்கையில் 6 பரப்பு வீடு கட்டுவதற்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு

தொடர்பு: 077 787 7843

## மக்கள் வங்கி

### பிராந்திய தலைமைக் காரியாலயம் - யாழ்ப்பாணம்

மக்கள் வங்கி யாழ்ப்பாணம் பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/ சேவை மையங்களில் 31.05.2024 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 04.08.2025 திகதி வரை மீட்டெடுக்கப்படாத/ புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடத்தில் காலை 8.30 மணிக்கு தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை நிகழும் தினங்கள் - 05.08.2025 மற்றும் 06.08.2025**

| ஏல விற்பனை நிகழும் இடம் | யாழ் ஸ்ரான்லி வீதிக் கிளை |
|---|---|
| கிளைகள் | யாழ்/ஸ்ரான்லி வீதி, தெல்லிப்பளை, யாழ்/பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ் /பல்கலைக்கழகம், யாழ் /க்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம் |
| சேவை நிலையங்கள் | மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), மல்லாகம், காங்கேசன்துறை, உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்யவும், ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்றவும், ஒன்றிணைத்துச் செயல்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

பிராந்திய முகாமையாளர், பிராந்திய தலைமைக் காரியாலயம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021-222 2601 : 021-222 2602

www.peoplesbank.lk 1961
PEOPLE'S BANK
Pride of the Nation

## வேலைவாய்ப்புகள்

| | |
|---|---|
| Video Editor | : 0760116820 |
| Photoshop Editing (Nelliady) | : 0779598521 |
| Production Assistant | : 0773501095 |
| கல் அரியும் வேலையாட்கள் | : 0776669766 |
| Sales Girls | : 0772619590 |
| Receptionist (Kilinochchi) | : 0773501095 |
| Marketing Executive/ Freelancer | : 0707555755 |
| தளபாட நிலைய வேலை(ஆண்கள்) | : 0769158453 |
| Album Designing (Nelliady) | : 0759598621 |
| Sales Officer | : 0761490770 |
| Waiter | : 0779567526 |
| Filter Water Shop | : 0764084333 |
| Event Planner | : 0777750318 |
| Sales Manager(Basic 90,000) | : 0770079053 |

வேலைவாய்ப்பு வட்சப் குரூப்ல் இணைய மற்றும் மேலதிக
வேலைவாய்ப்புகளுக்கு: dewmasweb.com
வேலையாட்கள் தேவையா: 0760984532
DEWMAS, 51, Amman Road, Nallur





## பிரதமகுருக்களின் ஆசியுரை



உலகத்தின் தோற்றத்திற்கும் ஒழுக்கத்திற்கும் காரணமாய் விளங்குவது சக்தி எறும்பு முதல் யானை ஈறான உயிரினங்களின் இயக்கத்துக்கு காரணம் சக்தி. பூமி முதலான கிராமங்களின் இயக்கத்துக்கு ஈர்ப்பு சக்தி அவசியம். இப்படி ,எவ்வாறு நோக்கிலும் சகல வற்றுக்கும் காரணமாகிறாள் சக்தி. அந்த வகையில் அன்பர்களாகிய அடியவர்களின் துயர்துடைத்து பேரின் பத்தை அளித்துவரும் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளுக்கு மஹோற்சவ திருவிழா நடைபெற்று இன்று திருமஞ் சத்திலே உலாவர இருக்கிறாள்

"தேவஸ்தான மஹோற்சவ குரு
சிவஸ்ரீ பாலசின்மயக் குருக்கள்

**கடந்த 2024 ஆம் ஆண்டு அமையப் பெற்ற இத் திருமஞ்சத்தில் அம்பாள் இரவு 8.00 மணியளவில் வீதி உலாவருவாள்**

## சிறப்புற வாழ்த்துவோர்

புலம்பெயர் வாழ்
இத்திமரத்தாள் புத்திரர்கள் திருப்பணிச்சபை

## ஆலய வரலாறு

சைவமும் தமிழும் தனைத்தோங்கும் யாழப்பாண நகரின் கிழக்குச் திசையில் அரியாலைக் கிராமத்தின் மேற்கு திசையில் வீற்றிருந்து அருள் சுரக்கும் அரியாலை வெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயம் மிகத் தொன்மையான வரலாற்றைக் கொண்டது. யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழ் மன்னர்களின் இராசதானியாக விளங்கிய நல்லூரின் தென்புலத்தில் அன்று தொட்டு இன்றுவரை அருள்மழை பொழிந்து எம்மைக் காப்பாற்றி வருகின்றாள் அன்னை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள்.

இந்த ஆலயத்தின் வரலாறு பல நூற்றாண்டுக்கு முற்பட்டவையாகும். ஆரம்பத்தில் தர்மகர்த்தா சபையினர் ஆலயத்தை நிர்வகித்து வந்தனர் தற்போது பரிபாலன சபையினர் நிர்வகித்து வருகின்றனர். மூர்த்தி. தலம். தீர்த்தம். விருட்சம் ஆகிய நான்கும் அமையப்பெற்ற எம் அம்பாளைத் தரிசிப்பதற்காக நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் புலம்பெயர் தேசங்களில் இருந்தும் வருகை தருகின்றனர். ஆலயப் புனருத்தாரனம் செய்யப்பட்ட 2022 ஆம் ஆண்டு அடியவர்களின் உதவியுடனும் புலம்பெயர் வாழ் தேசத்து உறவுகளின் உதவியுடனும் இராஜகோபுரம் அமைக்கப் பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. புதுப்பொலிவுடன் சிறப்புற்று விளங்கும் இவ்வாலயத்தில் தற்போது 10 திருவிழாக்களைக் கொண்ட மஹோற்சவ திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவுபெறும். கைலாசவாகனம். சப்பறம். தேர் என்பனவற்றுடன் புதிதாக அமையப்பெற்ற திருமஞ்சத்திலும் அம்பாள் உலாவந்து அடியவர் களுக்கு அருள்பாலிக் கின்றாள்.

## அம்பாளின் அதிசயம்

1912 ம் ஆண்டு யாழ்குடா நாடே அதிசயிக்கும் வகையில் ஆச்சரிய மான சம்பவம் நடைபெற்றது. அன்று அந்நியரின் ஆட்சி நடைபெற்ற காலம் யாழ் குடாநாடு என்றுமே காணாத சோகச் சம்பவம் இடம்பெற்றது. யாழ குடா நாட்டை வைசூரி எனும் அம்மை நோய் தாக்கியது. அரசினால் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அம்மை நோய் கோரத்தாண்டவம் ஆடியது. கிராமம் கிராமமாக மக்கள் நோயில் மடிந்தனர் பல ஆயிரக் கணக்கானவர் நோயில் மடிந்ததாக ஆவணங்கள் கூறு கின்றன. நோய்தொற்று ஏற்பட்டவர்களை ஊர்காவற்றுறை கடற் கோட்டையில் தனிமைப்படுத்தி மேலும் நோய் பரவாமல் ஆட்சியாளர்கள் செய்தனர். கிராமம் கிராமமாக இந்நோயினால் மாண்டவர்கள் தவிர நோயில் இருந்து குணமாகியவர்கள் உடற் சிதைவுகளுடன் காணப்பட்டனர். யாழ் குடாநாடே அதிசயிக்கும் வகையில் அரியாலை மேற்கு கிராமத்தில் மட்டும் ஒருவருக்கு கூட இந்நோய் ஏற்படவில்லை. இப் பேரழிவிலிருந்து எம் மக்களைக் காத்தவள் எமது அன்னை புவனேஸ்வரி தாயாகும்.

## இஷ்ட சித்திகளை பெறுவீர்களாக



ஈழமணித்திருநாட்டின் ஈடில்லா சிரமேயென விளங்கும் யாழ்ப்பாணத்திலே சைவமும் தமிழும் வளர்ந்த நாவலர் பெருமான் தோன்றிய நல்லூரை அடுத்தாற்போல் உள்ள அரியாலையூரில் வெட்டுக் குளத்தில் வீற்றிருந்து அருள்சக்தியாக விளங்கும் வெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளுக்கு மகோற்சவ திருவிழா நடைபெற்று வருகிறது. அந்தவகையில் இன்றையதினம் திருமஞ்சத்தில் அம்பாள் உலவந்து அடியவர்களுக்கு அருள் பாலிக்கிறாள்.

இன்று நடைபெறும் திருமஞ்ச திருவிழாவில் அம்பாளை தரிசிக்க வரும் அம்பாளின் அனைத்து அடியவர்களும் அருளாசி பெற்றிட ஆசிகள் கூறுகின்றேன்.

ஆலய அர்ச்சகர்
பிரம்ம ஸ்ரீ சண்முக மாதளசர்மா

**திருமஞ்ச நிகழ்வைத் தொடர்ந்து இரவு 9.00 மனிக்கு பின்னர் ஆலயத்தில் நடனம் மற்றும் பக்திபாடல், இசைக்குழு என்பன நடைபெறும்**

**இத்திருமஞ்சமானது புலம்பெயர் வாழ் இத்திமரத்தாள் புத்திரர்கள் திருப்பணிச் சபையினரால் அன்னை புவனேஸ்வரி அம்பாளுக்கு உபயமாக அளிக்கப்பட்டது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

பிறப்பு 19 . 03 . 1945



இறப்பு 23 . 06 . 2025

### திரு நடராஜா வீமாவேற்பிள்ளை

யாழ். துன்னாலை கிழக்கு வடமராட்சியைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா வீமாவேற்பிள்ளை அவர்கள் கடந்த (23-06-2025) திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா-நல்லநாயகம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவராஜா, நித்தியலட்சுமி, பாலசுப்பிரமணியம், பாலகிருஷ்ணன், சரஸ்வதி, பகவதி மற்றும் சச்சிதானந்தமூர்த்தி, திருஞானசம்பந்தபிள்ளை, விக்னேஸ்வரபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான அம்பாள், நல்லைநாதன் மற்றும் இராசமணி (லண்டன்), தனலட்சுமி (கனடா), தர்மலிங்கம் (அவுஸ்திரேலியா), ஜெகதீஸ்வரன் (இலங்கை), நாளாயினி (கனடா), சியாமளா (லண்டன்), சிவசுந்தரஜோதி( கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், உமாசங்கர், ரவிசங்கர், Dr. கௌரிசங்கர், காலஞ்சென்ற பிரியா பாலகிருஷ்ணன் மற்றும் திவ்யா, கிருஷ்ணா, ஸ்ரீராம், கஜன், ரூபன், ஹரன், சேகர், திவாகர் ஆகியோரின் அன்பு பெரிய, சிறிய தந்தையும்,

Dr. சிவகாமி, சேந்தன், கார்த்திகேயன், மகிந்தன், மகிழினி ஆகியோரின் அன்பு மாமாவும், கிருஷான், கீரன், ஹரிணி, ஜெகன் சந்தோஷ், மேக்ஸ் மூர்த்தி, செழியன், பல்லவி, கிருஷ்ணாலில்லி, கமிலா, ஜெய்டன், லீலா, ரியன், அஸ்வின், பவேதன், மனஷ்வினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் இன்று (02.07.2025) புதன்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் லண்டனில் நடைபெறும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
077 419 6284
+44 753 5216652
+14 16473 5380

**தகவல்:**
**மருமகள்:**
**மகிழினி ஜெகதீஸ்வரன்**



# யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் செல்வம் எம்.பி.யுடன் சந்திப்பு

இலங்கைக்கான இந்தியத் துணைத்தூதுவர் சாய் முரளியை ரெலோ சார்பாக கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலான குழுவினர் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள துணைத் தூதுவராலயத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன்போது மன்னார் மாவட்டத்தில் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்தல், பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்தல், காங்கேசன்துறையில் கப்பல் கட்டுவதற்கு சிறிய நிலையம் ஒன்றை அமைத்தல், மன்னாரில் நவீன முறையில் விளையாட்டு மைதானம் அமைத்தல்,மாந்தை மேற்கில் உள்ளக விளையாட்டு மைதானம் ஒன்றை அமைத்தல், மன்னார்ப் பிரதேசசபைப் பிரிவில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தத் தேவையான உதவிகள் போன்றவற்றை ஏற்படுத்துதல் ஆகியவை தொடர்பில் இந்தியத்துணைத்தூதுவரிடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. (ச-56)

# சமூகவலைத்தள முறைப்பாடுகள் நாட்டில் அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 2

இலங்கையில் பேஸ்புக் மற்றும் செயற்கை நுண்ணறிவு முறைகேடுகள் தொடர்பிலான முறைப்பாடுகள் அதிகரித்துள்ளன. அவற்றில் பெரும்பாலானவை பேஸ்புக், வாட்ஸ்அப், இன்ஸ்டாகிராம் மற்றும் ரிக் ரொக் உள்ளிட்ட தளங்களுடன் தொடர்புடையவையாகவுள்ளன. இவ்வாறான முறைப்பாடுகளில் 90வீத முறைப்பாடுகள் பேஸ்புக் மற்றும் செயற்கை நுண்ணறிவு தொடர்பானவை எனக் கணினி அவசர பதிலளிப்புப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது. (ச-இ)

## 80 ஆவது பிறந்த தினமும் ஈராண்டு நினைவஞ்சலியும்



## நஞ்ஜிற் இராஜலட்சுமி

**திதி: பூர்வபக்க ஸப்தமி**

ஈராண்டுகள் சென்றாலும்....
புன்னகை நிறைந்த உங்கள் முகமும்,
குறைவில்லா அன்பும்,
கனிவான பேச்சும்,
எமை விட்டகலாது என்றும்....
காலங்கள் கடந்தும் நீங்காது
உங்கள் நினைவலைகள்.....
நெஞ்சிலே என்றும் நீங்கா நினைவுகளுடன்
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
அம்பலந்தறை வைரவரை வேண்டி நிற்கின்றோம்...

தோற்றம் 07.06.1945 மறைவு 25.06.2023

ஆலங்குழாய்,
சண்டிலிப்பாய்.

குடும்பத்தினர்

(CS/58739) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதனாசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜுலை 2
இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் தொழிற்பயிற்சி நிலையங்களிலுள்ள கற்கைநெறிகளுக்கான போதனாசிரியர்கள் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த. சாதாரண தரத்தில் தமிழ், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். மூன்றாம்நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் என்.வி.க்யூ.-4 உடன் என்.வி.க்யூ.-5 அல்லது அதற்கு மேல் தொழிற்தகைமைச் சான்றிதழுடன் 1வருடம் கற்பித்தல் அனுபவம் உடையவராயிருத்தல் வேண்டும். சம்பந்தப்பட்ட துறையில் ஒரு வருடத்திற்கு மேலான தொழிற்றுறை அனுபவம் உடையவராயிருத்தல் வேண்டும்.

மேற்படி தகைமைகளுடைய ஆர்வமுடையவர்கள் விண்ணப்பப்படிவத்தினை www.vtasl.gov.lk இணையத்தளத்தினூடாகப்பெற்று எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் ஒன்லைன் ஊடாக விண்ணப்பிக்கமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-41)


## கற்கைநெறிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜுலை 2
இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையானது 2025ஆம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டிற்கான முழுநேரக் கற்கைநெறிகள் நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியுள்ளன. இக்கற்கைநெறிகள் யாழ்ப்பாணம், கைதடி, வல்வெட்டித்துறை, பண்டத்தரிப்பு, சுன்னாகம் ஆகிய தொழிற்பயிற்சி நிலையங்களில் நடைபெற்றுவருகின்றன.

தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியலாளர், மின்னிணைப்பாளர், கணிய அளவையியலாளர், விருந்தினர் வரவேற்பாளர், வெதுப்பாளர், சமையலாளர், நீர்க்குழாய் பொருத்துனர், முச்சக்கரவண்டி பொறிவலர், அலுமினியம் பொருத்துனர், உணவு மற்றும் குளிர்பானம் பரிமாறுபவர், குழந்தை பராமரிப்பாளர், பெண்கள் சிறுவர்களிற்கான ஆடை வடிவமைப்பாளர், சிகையலங்கரிப்பாளர், அழகுக்கலைவல்லுநர், விரைவுசேவை உணவு வழங்குநர், குளிரூட்டி மற்றும் வளி சீராக்கி திருத்துனர், மரவேலை தொழினுட்பவியலாளர், காய்ச்சி இணைப்பவர்(வெல்டர்), கட்டட நிர்மாண உதவியாளர் போன்ற கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இக்கற்கைநெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை மட்டம்-4 சான்றிதழுக்கான பயிற்சிநெறிகளாகும். கற்க விரும்புவோர் தங்கள் பதிவுகளை எதிர்வரும் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் மாவட்ட அலுவலகம் 4ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம், இல .12 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் அல்லது அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களிலும் மேற்கொள்ளமுடியும். மேலதிக விவரங்களினைப் பெற்றுக்கொள்வதற்கு 0212227949, 0710318737, 0776139307 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளமுடியும். (ச-41)




## பச்சிலைப்பள்ளியில் ஒளிராத மின்விளக்குகள்



கிளிநொச்சி, ஜுலை 2
பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஒளிராத வீதி மின்விளக்குகளைச் சீரமைப்புச் செய்வதற்கு ஒரு மில்லியன் ரூபா தேவை என்று சபையின் தவிசாளர் சுரேன் சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

பிரதேசசபையால் பொருத்தப்பட்டிருந்த 400 க்கு மேற்பட்ட வீதி விளக்குகள் பழுதடைந்து காணப்படுகின்றன.

வீதி விளக்குகள் பழுதடைந்த போதிலும் இவற்றுக்கான மாதாந்த கட்டணம் பிரதேச சபையினால் செலுத்தப்பட்டு வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-9)

## சிரேஷ்ட பிரஜைகளுக்கு சிறப்பு வட்டித் திட்டம்

கொழும்பு, ஜுலை 2
12 மாத நிலையான வைப்புத்தொகைகளுக்கு 3 வீத அதிக வட்டி வழங்கும் சிரேஷ்ட பிரஜைகளுக்கான சிறப்பு வட்டித்திட்டம் நேற்று முதல் நடைமுறைக்கு வருகின்றது என்று நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டங்களின்கீழ் இந்தத் திட்டத்துக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதன் பொய்கை

25.06.2025
புதன்கிழமை

வெற்றிபெற கற்றுக்கொள்ள வேண்டுமானால், நீங்கள் முதலில் தோல்வியடைய கற்றுக்கொள்ள வேண்டும்.

- மைக்கேல் ஜோர்டன்



## தமிழ்மொழிமூல ஆசிரியர் கல்விக்கு வலுச்சேர்த்த

# யாழ். பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீடம்

■ இ.சர்வேஸ்வரா
*கற்கை இணைப்பாளர், கல்வி முதுமாணி*

ழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் அதன் பீடங்களும் இலங்கைத் தேசத்தின் மனிதவள அபிவிருத்திக்கு ஆற்றிவரும் பங்களிப்புகள் பெறுமதியானவை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரையில், இலங்கையின் வடக்குப் பிராந்தியத்தின் அபிவிருத்திக்கும் அப்பால் இலங்கை முழுதும் பரவிவாழும் தமிழ் பேசும் மக்களின் அபிவிருத்திக்கும் தேவையான கருமங்களை முன்கொண்டு செல்ல வேண்டிய தேவையுள்ளது. இது விசேடமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மீது சுமத்தப்பட்டுள்ள பிரதான பொறுப்புடமையாகும். இதற்காக முனைப்புடன் எடுக்கப்படும் முயற்சிகளில் தலையாய முயற்சியாக விருப்பது இலங்கையின் தமிழ்மொழிமூலமான கல்விப் புலத்தின் ஆசிரியர் கல்வித் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் வகையிலான கற்கைகளை வழங்கி வருவதாகும். இவ்வாண்டு வெள்ளி விழாக்காணும் உயர்பட்டப்படிப்புகள் பீடத்தின் மூலமாக ஆசிரியர்கல்விப் புலத்தில் கல்வியியலில் பட்டப்பின் டிப்ளோமா மற்றும் முதுமாணி கற்கைநெறிகளை 2000ஆம் ஆண்டு தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வழங்கிவருகின்றது. யாழ்ப்பாணத்தைப் பிரதான கற்கைநிலையமாக மையப்படுத்தி ஒரு தளத்திலும் வவுனியாவை மற்றைய தளமாக வைத்தும் முதுமாணிக் கற்கைகள் வழங்கப்படுகின்றன. வவுனியாப் பல்கலைக்கழகம் முன்னர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வளாகமாக இருந்த போது அங்கு ஒரு பிராந்திய நிலையத்தை நிறுவி நடத்தப்பெற்ற கல்வியியல் முதுமாணி வவுனியா வளாகம் பல்கலைக் கழகமாக தரமுயர்த்தப்பட்ட பின்னரும் முறிவற்று தொடர்ச்சியாக நடத்தப்படுவது கவனத்துக்குரியது. இது இரண்டு பல்கலைக்கழகங் களுக்குமிடையிலான பிராந்தியநலன் சார்ந்த அக்கறையின் வெளிப்பாடாகும். அத்துடன் வவுனியா நிலையத்தில் பட்டப்பின் கல்வியியல் டிப்ளோமாக் கற்கைநெறியும் நடத்தப்பட்டு வருகின்றது. இருபத்தைந்து வருடங்களாக நடத்தப்படும் கல்வியியல் முதுமாணிக் கற்கைநெறியைப் பூர்த்திசெய்து இதுவரை 2 ஆயிரத்து 60 முதுமாணிப் பட்டதாரிகள் வெளியேறியுள்ளனர்.

### போட்டித்தன்மை அடிப்படையிலான அனுமதி

உயர்பட்டப்படிப்புகள் பீடத்தினால் வழங்கப்படும் கற்கைநெறிகளில் அதிக போட்டித்தன்மையும் கிராக்கியுமிக்க கற்கைநெறியாக திகழ்வது கல்விமுதுமாணிக் கற்கைநெறியாகும். வருடம் தோறும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அனுமதியின் மொத்த எண்ணிக்கையின் பல மடங்கு விண்ணப்பங்கள் கிடைக்கப் பெறுகின்றன. இதனால் விண்ணப்பதாரிகளின் கல்வியியல் சார்ந்த அறிவையும் நுண்ணறிவுத்திறனையும் பரீட்சிக்கத்தக்க தெரிவுப்பரீட்சை ஒன்று முதற்கட்டமாக நடத்தப்படுகின்றது. தெரிவுப் பரீட்சையில் சித்திப்புள்ளிகளுக்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்களுக்குக் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு நடைபெறுகின்றது. நேர்முகத் தேர்வின் போது பல்வேறு விடயதானங்கள் கருத்தில் எடுக்கப்பட்டு புள்ளிகள் வழங்கப்படுகின்றன. தெரிவுப்பரீட்சை மற்றும் நேர்முகத்தேர்வுகளின் அடிப்படையில் திறமையடிப்படையில் அனுமதி வழங்கப்படுகின்றது.

ஆரம்பத்தில் ஒரு அணியில் 50 மாணவர்களே அனுமதிக்கப்பட்டனர். இருந்தபோதும் 2007 தொடக்கம் 2009ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் நாட்டில் நிலவிய போர்நெருக்கடிகள் காரணமாக அந்த ஆண்டுகளில் அனுமதிகள் வழங்கப்படாமை ஆசிரியர் கல்வி வாண்மைவிருத்தியை எதிர்பார்த்திருக்கும் தரப்பினர் மத்தியில் பின்னடைவை ஏற்படுத்திவிடக்கூடாது என்பதைக் கருத்திற்கொண்டு பின்னர் அடுத்துவந்த ஆண்டுகளில் அனுமதிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்புச் செய்யப்பட்டது. இதனால் ஒரு அணியிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை 100இனைத் தொட்டது. இந்த நடைமுறை ஐந்து கல்வியாண்டுகளாக பேணப்பட்டுவந்த சூழலில் பின்னர் அதிகரித்த கேள்வியின் காரணமாகவும் சமவாய்ப்பை உறுதிப்படுத்தும் விதமாகவும் ஒரே கல்வியாண்டில் கல்வி முதுமாணியில் இரு அணிகள் உள்வாங்கப்பட்டன. அணிக்குத் தலா 100 பேர் எனும் விகிதத்தில் வழங்கப்பட்ட இந்த அனுமதிகளின் காரணமாக திடீரென ஆசிரியர் கல்வி மற்றும் வாண்மைத்துவக் கல்விக்கான வாய்ப்பில் ஒரு பெரும் கதவு திறக்கப்பட்டது. மூன்று பிரிவுகளைச் சமாந்தரமாகக் கொண்ட கல்விமுதுமாணிக் கற்கைநெறி நடத்தப்பட்டுவருகின்றது. அதிலும் குறிப்பாக வரலாற்றில் முதல்தடவையாக முழுநேரக் கற்கைநெறி எனும் நியமத்தைப் பூர்த்திசெய்யும் விதத்தில் வாரநாள்களையும் உள்ளடக்கி கற்கைச் செயற்பாடுகள் இடம்பெற்றுவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

### தனித்துவமான தராதர கல்விமுதுமாணி

பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவின் தரநிர்ணயச் சட்டகத்தின் பிரகாரம் 2019ஆம் ஆண்டு கலைத்திட்ட மறுசீரமைப்பு ஒன்று நடைபெற்றது. இந்தக் கட்டமைப்பு மறுசீரமைப்பின் போது முன்னர் 40 சான்றுப் பெறுமதிகளைக் கொண்டிருந்த கற்கை 30 சான்றுப் பெறுமதிகளாகக் குறைக்கப்பட்டது. குறிப்பாக ஒரு வருட காலப்பகுதி எனும் கற்கைக் காலத்தை பிரதான நியமமாகக்கொண்டு கல்வி முதுமாணி கற்கைநெறிமட்டம் ஒன்பதுக்குரியதாக நிர்ணயம் செய்யப்பட்டது. மட்டம் ஒன்பதுக்குரிய கற்கைநெறியாக இருந்தபோதும் அது மட்டம் பத்துக்குரிய தன்மைகளையே கொண்டுள்ளது. குறிப்பாக மட்டம் 9 கற்கைநெறிக்கு ஆய்வுச் செயற்பாடு அவசியமற்றதொன்று. ஆனால் உயர்பட்டப்படிப்புகள் பீடத்தின் கல்வியியல் முதுமாணிக் கற்கைநெறி பிரதான அலகாக ஆய்வுச் செயற்பாட்டைக் கொண்டிருப்பது விசேடமான தன்மையாகும். இது கற்போர் சமூகத்தின் வாண்மைவிருத்தியின் அவசியத்தன்மையை கருத்திற் கொண்டு செய்யப்பட்டுள்ள ஏற்பாடாகும்.

### உள்ளகப் பயிற்சி எனும் வித்தியாசமான அணுகுமுறை


வாண்மைத்துவ துறைசார் இளமாணிப் பட்டக்கற்கைகளில் வழங்கப்படும் உள்ளகப் பயிற்சிநெறிக்கு ஈடான ஒரு விடயப்பரப்பும் கல்விமுதுமாணித் திட்டத்தில் உள்ளடக்கபட்டுள்ளது. இந்த உள்ளகப் பயிற்சியின்போது கல்வி முதுமாணி மாணவர்கள் பல்வேறு கல்வி சார் நிறுவனங்களுக்கும் நேரடியாக விஜயம் செய்கின்றனர். அங்கு ஒருவாரம் முழுவதும் முழுமையாக பயிற்சியில் ஈடுபடுகின்றனர். அதன்மூலம் செயற்பாடுகள் சமூகப் பயனுறித்தன்மை என்பன பற்றித் தெளிவான விளக்கத்தைப் பெற்றுக்கொள்கின்றனர். குறிப்பாக தேசிய கல்வியியற் கல்லூரிகள், ஆசிரியர் கலாசாலைகள், உயர்தொழில்நுட்பக் கற்கை நிறுவனம், தொழில்நுட்பக் கல்லூரி, பல்கலைக்கழக கல்லூரி, தேசிய தொழில்பயிற்சி அதிகாரசபை, தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை, சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை, நவீல்ட் பாடசாலை, ஜேர்மன் தொழில்நுட்பக் கல்லூரி, சமுத்திரப் பல்கலைக்கழகம் உள்ளிட்ட பல நிறுவனங்களுக்கும் உள்ளகப் பயிற்சிக்காக மாணவர்கள் அனுப்பப்படுகின்றனர்.

### தனிநபர் வாண்மைத்துவ விருத்தி

முகாமைத்துவபீட விரிவுரையாளர்களின் பங்குபற்றுதலுடன் தனிப்பட்ட வாண்மைத்துவ விருத்தி கருதிய அலகு ஒன்றும் தற்போதுள்ள கலைத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளது. இந்த அலகு கல்வியியலாளர்கள் தமது தனிப்பட்ட வாழ்க்கை, தொழில்வாழ்க்கை, சமூக வாழ்க்கை என்பவற்றுக்கு இடையிலான சமநிலையைப் பேணும் நுட்பங்களைப் போதிக்கும் விதத்தில் அமைந்துள்ளது. மொத்தமாக 30 மணித்தியாலங்களைக் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ள இக் கற்கைநெறி பிரதான மதிப்பீட்டு பொறிமுறைகளுக்குள் உள்வாங்கப்படாது வாண்மைத்துவ விருத்தியை பிரதான இலக்காகக் கொண்டு நடைமுறைப்படுத்தப் படுகின்றது. கற்கைநெறியின் முடிவில் தயாரிக்கப்படும் தனிநபர் வாண்மைவிருத்திக்கான செயற்றிட்டம் கல்வி முதுமாணி மாணவர்கள் தமது எதிர்கால செல்நெறியை சரியான விதத்தில் திட்டமிட உதவுகின்றது.

*(மறுபக்கம் பார்க்க)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈ.சற்குணன்
ராந்ய முகாமையாளர்(பதில்)
யாழ்ப்பாணம்

# கள்வர்களால் சீரழிக்கப்படும் தென்னைப் பொருளாதாரம்

தற்பொழுது இலங்கையில் பேசு பொருளாகியுள்ள விடயம் தேங்காய் விலை அதிகரிப்பாகும். இதற்குத் தேங்காய் உற்பத்தி குறைவடைந்துள்ளமையும் பிரதான காரணமாகும். தென்னைச் செய்கையாளர்களைப் பொறுத்தவரையில் தேங்காய்கள் களவுபோதல் இன்று பெரும் சவாலாக மாறியுள்ளது.

தேங்காய் விலை ஒரு ரூபாவாக இருக்கும் போதும் களவு நிகழ்ந்தது 200 ரூபாவாக இருக்கும்போதும் களவு நிகழ்கின்றது. ஆனால் தேங்காய் விலை குறைவாக இருக்கும்போது ஒருவரும் இதைப்பற்றி அலட்டிக்கொள்ளவில்லை. தற்போது விலை அதிகரித்துள்ளமையால் அது ஒருபாரதூரமான விடயமாக எமக்குத் தென்படுகிறது.

அன்றுதொட்டு இன்றுவரை எமது இடங்களில் வீடுகள், கடைகள், ஆலயங்கள் என்பன அவ்வப்போது உடைக்கப்பட்டு திருட்டுகள் இடம்பெறுகின்றன. அதனைக் கட்டுப்படுத்த நாம் என்ன நடவடிக்கை எடுத்தோம்? தற்போதைய நவீனயுகத்தில் எத்தனையோ விதமான பாதுகாப்புப் பொறிமுறைகள் இருந்தும் அதாவது கண்காணிப்புக் கருவி, அலாரச் செயன்முறைகள் போன்றன இருந்தும் இந்தக் களவை அறவே இல்லாது ஒழிக்கமுடிந்ததா? காவல்துறையினரின் மோப்பநாய்கள் இருந்தும் அவர்களின் கண்களில் மண்ணைத்தூவி கனகச்சிதமாக காரியங்கள் இடம்பெறுகின்றன.

எமது சமூகப் பொருளாதாரக் கட்டமைப்பானது மாற்றப்பட்டுக்கொண்டிருக்கிறது. இளைஞர் யுவதிகள் போதைவஸ்துக்கு அடிமையாகி அதிலிருந்து மீண்டுவருவதற்கு பகீரதப் பிரயத்தனம் எடுத்துவருகிறார்கள். கஸ்டப்பட்டு உழைக்காமல் இலகுவாக உழைக்கும் அதாவது நேர்மறையற்றவழியில் உழைக்கும் கூட்டம் உருவாகிவருகிறது. உதாரணமாக பத்துத் தேங்காயைக் களவாகப் பிடுங்கி விற்றால் இலகுவாக இரண்டாயிரம் ரூபா பார்க்கலாம் என நினைக்கும் கூட்டம் உருவாகியுள்ளது. தென்னைச் செய்கையாளர்களின் வாழ்க்கையும், அவர்களின் பொருளாதாரமும் அண்மைக்காலமாகப் பெரும் சிக்கலுக்குள் தள்ளப்பட்டுள்ள நிலையில், கள்வர்களின் நடமாட்டம் பாதிப்பைப் பலமடங்காக உயர்த்தியுள்ளது. எனவே, இந்த நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து நாம் அக்கறையுடன் செயற்பட வேண்டும். தென்னைச் செய்கையாளர்களின் இருப்பை உறுதிப்படுத்துவது இக்காலத்தில் அவசியமாகியுள்ளது. ■

# தமிழ்மொழிமூல ஆசிரியர்...



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

**கல்விச் சுற்றுலா**

மாணவர்களினால் செலுத்தப்படும் கற்கைக் கட்டணத்தின் ஒரு பகுதி இச் செயற்பாடுகளுக்காக ஒதுக்கப்படுகின்றது. இது ஒரு கணிசமான அளவு தொகையாகும். இந்த ஒதுக்கீட்டிலிருந்து உள்நாட்டுக்குரிய கல்விச் சுற்றுலா செல்வதற்கான வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. நாட்டின் இதர பாகங்களிலுமுள்ள கல்விசார் நிறுவனங்களுக்குச் சென்றுவருவதுடன் அங்கு சந்திக்கும் புலமையாளர்களுடன் வலைப்பின்னல்களை உருவாக்கிக்கொள்ளவும் இச் சுற்றுலாக்கள் வாய்ப்பாக அமைகின்றன. அத்துடன் குறித்த அணியில் கல்விபயிலும் ஆசிரிய மாணவர்கள் மத்தியில் ஒரு கூட்டிணைவு மற்றும் நெருக்கத்தை வலுப்படுத்தவும் இதுவொரு வாய்ப்பாக அமைகின்றது.

**சஞ்சிகை வெளியீடு**

கல்வி முதுமாணிக் கற்கைநெறியின் தொட்டுணரத்தக்க வெளியீடுகளின் முதன்மையாக இருப்பது ஒவ்வொரு அணிகளினாலும் வெளியிடப்படுகின்ற சஞ்சிகைகள் ஆகும். யாழ்ப்பாண நிலையத்தால் 'முதிர்முகை' எனும் பெயரிலும் வவுனியா வளாகத்தினரால் 'முதுசித்தம்' எனும் பெயரிலும் சஞ்சிகைகள் வெளியிடப்படுகின்றன. மாணவர்களின் கல்விசார் அறிவுப் பரவலாக்கச் செயன்முறையின் தூண்டலாக அமையும் இந்தச் சஞ்சிகைகள் துறைசார் விற்பன்னர்களின் கட்டுரைகளையும் கொண்டமைவதும் குறிப்பிடத்தக்கதாகும்.


**சவால்களும் சாத்தியங்களும்**

முழுநேரக் கற்கைநெறியாக வடிவமைக்கப்பட்டுள்ள இக் கற்கைநெறியைத் தொடர்வதற்காக ஆசிரிய மாணவர்கள் சம்பளத்துடன் கூடிய கற்றல் விடுமுறையைப் பெற்றுக்கொள்ளும் ஏற்பாடுகள் சுற்றுநிருபங்களில் செய்யப்பட்டுள்ளன. இருப்பினும் ஆளணிப் பற்றாக்குறை, நிர்வாக நெருக்கீடுகள், சம நேரத்தில் கற்றல் விடுமுறை கோருபவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு என்பவற்றினால் கற்கை விடுமுறை வழங்குவதில் கல்வி அமைச்சு சார்ந்த திணைக்களங்கள் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கின்றன. ஆயினும் இயன்றளவு கற்கைவிடுமுறைக் கோரிக்கைகள் சாதகமாகப் பரிசீலிக்கப்படுகின்றன. அண்மையில் ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பில் செய்யப்பட்ட திருத்தங்களுக்கு அமைய ஆசிரியர் சேவையில் தரம் 2ஐச் சேர்ந்தவர்களுக்கு கல்விமுதுமாணிக் கற்கைநெறியில் முன்னுரிமை அளிப்பது அவசியமாகின்றது. இதனால் கற்கை விடுமுறை வழங்குவதிலும் இவர்கள் முதன்மைக் கவனத்துக்குரியவர்கள் ஆகின்றனர். இதனால் ஏனையவர்களின் கற்கைவிடுமுறைக் கோரிக்கைகள் குறித்து முடிவெடுப்பதில் தாமதங்கள் ஏற்படுகின்றன. இது வாரநாள்களில் நடத்தப்படும் பிரிவின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளைத் திட்டமிடுவதில் நெருக்கடிகளைத் தோற்றுவிக்கின்றன.

மாணவர் எண்ணிக்கை அதிகரிக்கும்போது சமாந்தரமாக வளவாளர்களின் வேலைப்பழுவும் அதிகரிக்கின்றது. குறிப்பாக உள்ளக வளவாளர்களின் வேலைப்பழு மும்மடங்காகின்றது. பல்கலைக்கழக நியதிகளுக்கு உட்பட்டுப் பரீட்சைசார் விடயங்கள் மிகவும் கவனத்துடன் அணுகப்படவேண்டும். உள்ளக வளவாளர்களாகச் செயற்படும் கல்வியியற்றுறை விரிவுரையாளர்களே பிரதான பரீட்சகர்களாக செயற்பட வேண்டியவர்களாகவுள்ளனர். இது பொறுப்புக்கூறல், மற்றும் இரகசியக்காப்பு என்பவற்றை பரீட்சை விடயங்களில் பேணுவதற்கு முக்கியமானதாகும். இதனால் அவர்களது வேலைப்பழு அதிகரிக்கின்றது. ஆய்வுச் செயற்பாடுகளில் அதிகளவான மாணவர்கள் ஈடுபடுவதனால் ஒவ்வொருவருக்கும் தனித்துவமான மேற்பார்வையாளர்களை நியமிப்பது அவசியமானது.

உயர்பட்டப்படிப்புக்கள் பீடம் தனது வெள்ளிவிழா ஆண்டைக் கடக்கும் சந்தர்ப்பத்தில் இக் கற்கைநெறியின் வினைத்திறனான நிலைபேண்தகமைமிக்க மறுசீரமைப்புக்கள் குறித்த உரையாடல்களை ஆரம்பித்துள்ளன. குறிப்பாக மட்டம் 9 மற்றும் மட்டம் 10 ஆகிய இரண்டு தரநிர்ணயங்களையும் உள்ளடக்கியதாக இரண்டு அவத்தைகளைக் கொண்டதாக வடிவமைக்கப்படுவது குறித்துச் சிந்திக்கப்படுகின்றது. அதுபோன்று மீண்டும் ஆங்கிலமொழி மூலமான கற்கைநெறியை ஆரம்பிப்பது தொடர்பிலும் சாதகமான பரிசீலனைகள் உள்ளன. எண்ணிக்கை அதிகரிக்கும்போது சமாந்தரமாக தரத்தையும் உறுதிசெய்வது என்பதும் அவசியமானது. இதற்கு ஆங்கில மொழிமூலமான கற்கைநெறி துணைசெய்யும். அத்துடன் பொதுநிலைப்படுத்தப்பட்ட கல்விமுதுமாணிக் கற்கைநெறி எனும் நிலையைத் தாண்டி விசேட பரப்புகளில் முதுமாணிக் கற்கைநெறிகளை ஆரம்பிப்பது அவசியமானது. குறிப்பாக கல்வி முகாமைத்துவம், கல்வி உளவியல், வழிகாட்டல் ஆலோசனை, விசேட கல்வி, முன்பிள்ளை மற்றும் ஆரம்பக்கல்வி ஆகிய பரப்புகளில் கல்வி முதுமாணிக் கற்கைகள் ஆரம்பிக்கப்படுவது சிறப்பான அடைவாகும். இந்த முயற்சியின் ஒரு கட்டமாக கல்வி முகாமைத்துவப் பரப்பில் ஒரு பட்டப்பின் டிப்ளோமாக் கற்கையை ஆரம்பிக்க பல்கலைக்கழகப் பேரவை ஒப்புதல் அளித்துள்ளது. விரைவில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதி பெறப்பட்டு இக் கற்கைநெறி ஆரம்பிக்கப்படும் எனும் எதிர்பார்ப்புள்ளது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மரணித்துப்போன மனிதம்

மனிதனின் பரிணாம வளர்ச்சியில்
நடந்த படு பாதகமான சம்பவம்
செம்மணி மனிதப் புதையல்கள் மன்னிக்கவும்.
மனிதப் புதைகுழிகள்
உலகின் எந்தவொரு மூலையிலும்
அரங்கேறாத மிருகச்செயல்
இல்லை............... இல்லை
மிருகங்களைவிட கேவலமான செயல்

அயோத்தியிலிருந்த
கற்புக்கரசியைக் கடத்திவந்த
இராவண தேசமடா இது
அந்த ஈழ தேசத்திலும் அவள்
பத்தினியாகவே இருந்தாள்
அதே ஈழதேசத்திலே
அம்மணமாய் பல
எலும்புக்கூடுகள்
உலக அரங்கே வெட்கி
தலைகுனியும் நேரமிது

கொத்துக் கொத்தாய்
குடும்பம் குடும்பமாய்
எத்தனை உடலங்கள்
அந்த மண்ணுக்குள்ளே
எத்தனை ஏக்கங்கள்
எத்தனை பரிதவிப்புகள்
எத்தனை சிந்தனைகள்
எத்தனை ஏமாற்றங்கள்
அத்தனையும் இந்த மண்ணுக்குள்ளே
மாண்டு போன
மர்மம்தான் என்ன?.......

இத்தனை அவலங்களையும்
மரணம்கூட கண்டிருந்தால்
மரணம்கூட
மௌனமாக பூமிப்பந்தை
விட்டு வெளியேறியிருக்கும்

காலதேவனும்
கலங்கிப்போன
நேரமிது

பச்சிளங்குழந்தைகளையும்
பால்குடி மாறாத குழந்தைகளையும்
விட்டுவைக்காத பாதகர்களே
உங்களுக்கும் குடும்பம் உண்டு
குழந்தைகள் உண்டு
என்பதை மறந்துவிட்டீர்கள்

பட்டலந்த முகாம் பற்றி
நாடாளுமன்றத்திலே கொக்கரிக்கும்
படித்த படிக்காத
மேதாவிகளே!
செம்மணிப் புதைகுழி பற்றியும்
அறிக்கையை சமர்ப்பியுங்கள்
அங்கே நீதி கிடைக்கும் என்று
எள்ளளவும் நம்பிக்கை இல்லை எனக்கு
தவறு செய்தவன்
தண்டிக்கப்படவேண்டியவனிடம்
நீதி கேட்பது மதம் பிடித்த யானையிடம்
தந்தத்தைக் கேட்பதற்கு ஒப்பானது


மனித குலமே..
வெட்கப்படவேண்டிய செயலை மனிதகுலமே
செய்தது மனிதகுலத்துக்கே
சர்வதேச அவமானம்
ஒரே குழியில் பல உடலங்கள் அதிலும்
அம்மணமாய் புதைக்கும்
அதி மேதாவிகள் வாழ்ந்த வாழ்கின்ற
ஈழ தேசமடா இது.

செம்மணி சிந்துபாத்தி
கற்கோவளம் பருத்தித்துறை
முள்ளிவாய்க்கால் வட்டுவாகல்
மண்டைதீவு அல்லைப்பிட்டி

இன்னும் எத்தனை குழிகள்?
எங்கள் "ஈழ தேசத்தில்"
ஒரு இனத்தின் இருப்பை
அழிப்பதற்கு எத்தனை எத்தனை
முயற்சிகள் அத்தனைக்கும்
அப்பாவி உயிர்கள்

அடேய் "பாதகா"
அந்தக்குழந்தை என்ன செய்தது?
அந்தச் சிறுவன் செய்த குற்றம்
தான் என்ன?
அந்தச் சிறுமிதான்
உனக்கு என்ன செய்தாள்?
குழந்தையின் அம்மணத்திலே
நீ எதனைக் கண்டாய் காமுக.......
விதி வலியது
கர்மா கொடியது
"காலம் பதில் சொல்லும்.."

ஏ.வி.கார்ஜன்
சண்டிலிப்பாய் வடக்கு



# எது அழகு?

நம்மவர்களிடையே அழிந்துபோன ஒன்று என்னவென்றால், அது அழகுதான். நான் கூறுவது முக அழகை அல்ல, மன அழகை. மனம் சுத்தமாக இருந்தால் போதும். முக அழகு எதற்கு?

நம் சமூகத்திலுள்ள பலர், ஒருவரின் முகத்தைப் பார்த்து கேலி செய்வதும், கிண்டல் செய்வதும், நக்கலாகச் சிரிப்பதும், கூட்டம்கூடிக் கதைப்பதும் உண்டு. "இவள் ஏன் இப்படிக் கறுப்பாய் இருக்கிறாள்? என்ன முகூர்த்தத்தில் பிறந்தாளோ?" என்றெல்லாம் கேலி பேசுவர். அழகு என்பது முகத்தைப் பார்த்துக் கணிப்பது அல்ல. ஒருவரின் உள்ளம் எவ்வளவு சுத்தமாக இருக்கிறதோ, ஒருவர் நற்பண்புள்ளவராக இருக்கிறாரோ, அதுவே அழகு எனக் கணிக்கப்படும். இதைப்போல பலவற்றைக் கூறலாம்.

என்னுள்ளத்தில் உதித்தவை:

"கணை போன்ற விழிகள் பெண்ணுக்கு அழகு"
"திரண்ட தோள்கள் ஆணுக்கு அழகு"
"குண்டாக இருத்தல் குழந்தைக்கு அழகு"
"ஒல்லியாக இருத்தல் கிழவிக்கு அழகு"
"நரைத்த தலை அப்பாவுக்கு அழகு"
"சிரித்த முகம் அம்மாவுக்கு அழகு"
"சிடுசிடுப்பு முகம் மாமியாருக்கு அழகு"
"அழுத முகம் மருமகளுக்கு அழகு"
"அசட்டுச் சிரிப்பு கணவனுக்கு அழகு"
"மயக்கும் விழிகள் மனைவிக்கு அழகு"
"படிப்பில் முனைப்பது பிள்ளைக்கு அழகு"
"காதல் கொண்டால் காக்காவும் அழகு"
"காதலன் உளறும் கவிதை அழகு"
"காதலி சிணுங்கும் நிமிடங்கள் அழகு"


"அழகு என்ற வார்த்தையே அழகு. அந்த அழகிருந்தால் பழகும் உலகு."

சைவம் திரைப்படத்தில் வெளிவந்த "அழகே அழகே எதுவும் அழகே" என்ற பாடல், எதுவெல்லாம் அழகு என்பதைச் சிறப்பாக எடுத்துரைக்கிறது. "அழகைப் பற்றிக் கனவு காணாதீர்கள். அது உங்கள் கனவைப் பாழாக்கிவிடும்" என்கிறார் அப்துல்கலாம்.

சிவப்பு மனிதனுக்கு நிழல் கறுப்புதான். கறுப்பு மனிதனுக்கு இரத்தம் சிவப்புதான். ஒரு பெரியவரிடம் கேட்டேன், "எது அழகு?" என்று. அவர் கூறினார், "பார்க்கிறவர் கண்ணால் பார்த்தால், இந்தப் பிரபஞ்சத்திலுள்ள அனைத்துமே அழகுதான்." பல காலமாகக் குண்டுவெடிப்பு, கொரோனா என்று நாம் முடங்கிக்கிடந்து, துன்பப்பட்டு, பல மாற்றங்கள் நிகழ்ந்தபோதும், அன்று தொடங்கி இன்று வரை "அழகு" என்ற வார்த்தை ஒரே எண்ணத்தையே நம்முள் விதைத்துள்ளது–அழகு என்பது உடல் சார்ந்தது என்பதே அது. ஆகவே, எம்முள் விதைக்கப்பட்டுள்ள இந்த இழிவான எண்ணத்தை விலக்கி, எமது எதிர்காலச் சந்ததியினரை நல்ல திசைக்கு இட்டுச் செல்வோம்!

**பார்த்திமன் அபிநஜா**
*திருவையாறு, கிளிநொச்சி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ். தாவடிப்பதியுறை

# அருள்மிகு தாவடி ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி கோவில்

# புனராவர்த்தன நவகுண்ட சகித அஷ்டபந்தன சமர்ப்பண

# மஹா கும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி விழா - 2025

## மஹாகும்பாபிஷேகம் : 02.07.2025 புதன் காலை 5.55 மணிமுதல் 6.50 மணி வரை

துதி

கற்பக வளம் சுரக்கும் கருணைநாயகனே போற்றி
நற்பத நலம் சுரந்து எமை ஆண்டாய் போற்றி
பொற்புயர் தாவடி பதி வாழும் புவன தாரணனே போற்றி
அற்புத அம்பலவாண கந்தனே போற்றி போற்றி

**சிறப்புமிகு முருகப்பெருமான் ஆலயங்களை தன்னகத்தே கொண்டு விளங்கும் ஈழவள நாட்டில் வடபால் தாவடிப் பதியிலே வீற்றிருந்து அடியவர்கள் இடர் களைந்து அருள்பாலிக்கும் ஸ்ரீ அம்பலவாண முருகப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் நிகழும் விசுவாசுவ வருடம் ஆனி மாதம் 18ம் நாள் (02.07.2025) புதன்கிழமை ஸப்தமி திதியும், உத்தர நட்சத்திரமும் அமிர்த சித்த யோகமும் கூடிய சுப வேளையில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற முருகன் திருவருள் கை கூடியுள்ளது. முருகன் அடியவர்கள் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.**

### வாழ்த்துச் செய்தி



அரிதிரு முருகனே! அரன் விழிச் சுடரோனே! கரிமுதற் கிளையோனே! கிரிபல வளர்வோனே!
அருந்தமிழ் ஆர்வலனே! அழகிய வேலவனே! வருந்திடும் எனைஆள வடிவுடன் வருவாயே!

ஈழ வளநாட்டின் வடபால் தாவடி என்னும் திருப்பதியிலே வீற்றிருந்து அருள்பாலிக்கும் ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி கோயில் மகா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா 2025 இனையொட்டி வெளியிடப்படும் கும்பாபிஷேக பெருவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதற்கு இறையருள் கூடியமைக்காக ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமிப் பெருமானுக்கு அவர் தாழ் பணிந்து நன்றி கூறுகின்றேன். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடாத்தப்படும் இக் கும்பாபிஷேகம் நிகழும் விசுவாவசு வருடம் ஆனிமாதம் 18ம் நாள் (02.07.2025) புதன்கிழமை காலை 5.55 மணி முதல் 6.50 மணிவரையான சுபமுகூர்த்தத்தில் இடம் பெற திருவருள்கூடி இருப்பது யாழ். தாவடி வாழ் மக்களின் தவப்பேறாகும். **இச்சடங்கின் மூலம் ஆலயத்தின் உள்ளிருக்கும் கடவுள் சிலைகளுக்குத் தெய்வீகத்தன்மை புதுப்பிக்கப்படுகிறது. குடத்தில் நீர் நிரப்பி, புனித ஆறுகளின் நீராக அதனை உருவகித்து, மந்திரங்கள் மூலம் தெய்வத் தன்மை ஏற்றப்பட்ட நீரினால் சிலைகளும் கோபுரத்தின் உச்சியிலிருக்கும் கலசங்களும் நீராட்டப்படுவதனால் இந்நிகழ்வு "குடமுழுக்கு" என்றும் அழைக்கப்படுகிறது.** இதன் மூலம் கோபுரக்கலசங்களும் தெய்வத்தன்மை பெறுவதனால் ஒருவர் கோவிலுக்குள் செல்லாமலே கோபுர தரிசனம் மூலம் கடவுளின் அருளைப் பெற இயலும் என்பது இறையாளர்களின் நம்பிக்கை. அந்த வகையில். இன்றைய தினம் மகா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழாவினைக்காணும் அருள்மிகு தாவடி ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமியின் அருள். யாழ். தாவடி வாழ் மக்களுக்கு மட்டுமல்லாது உலகெங்கும் வாழும் தமிழ் பேசும் அனைத்து மக்களுக்கும் கிடைக்க வேண்டுமென மனதார வேண்டி. இக் கும்பாபிஷேக விழா எல்லா வகையிலும் சிறப்பாக அமைய வேண்டுமென எம்பெருமான் பாதக்கமலங்களைப் பணிந்து எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**நாகலிங்கம் வேதநாயகன்**
**ஆளுநர், வடக்கு மாகாணம்**

### வாழ்த்துரை



அருள்மிகு தாவடி ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகத்தினை முன்னிட்டு வெளியிடப்படும் மஹா கும்பாபிஷேக மலருக்கு வாழ்த்துரை வழங்குவதனையிட்டு பெரும் மகிழ்வடைகின்றேன். ஆலயம் ஒன்றின் வரலாற்றில் இடம்பெறும் முக்கிய கிரியைகளில் பெரும் சாந்தி எனக் குறிப்பிடப்படும் மஹா கும்பாபிஷேகத்திற்கு தனியான இடம் உண்டு. **இதனால்தான் கும்பாபிஷேகங்களைக் காண்பதும் அவற்றில் கலந்து கொள்வதும் மஹா கும்பாபிஷேகம் இடம்பெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதும் மானிட வாழ்வில் கிடைத்தற்கரியதாகக் குறிப்பிடப்படுகின்றது.** அந்த வகையில் கிராமத்தில் வாழும் இறைபக்தர்கள் ஒன்றிணைந்து அருள்மிகு தாவடி ஸ்ரீ அம்பலவாண கந்தசாமி ஆலயத்தினை அழகுற நிர்மாணித்திருப்பதுடன் அவ் இறைவனுக்கு கும்பாபிஷேகம் நிகழ்த்தி ஆனந்தக் கடலில் பிரவேசிக்கின்றனர். இந்த நன்னாளில் தங்களுடன் இணைந்து புண்ணிய கருமம் ஒன்றில் ஈடுபடும் பாக்கியம் கிடைத்தமையினையிட்டு பெரும் மகிழ்வடைவதுடன். இந்த மஹா கும்பாபிஷேகத்தினை நிகழ்த்தும் குருமார்கள் ஆலய பரிபாலன சபையினர் நிதி மற்றும் ஒத்துழைப்பு வழங்கியவர்கள் அனைவரையும் பாராட்டுவதுடன் அவர்களுக்கு எல்லாம் வல்ல இறைவனின் திருக்கடாட்சம் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு பா.ஜெயகரன்**
**பிரதேச செயலாளர், உடுவில்**

### ஆசியுரை



சகல செல்வங்களும் பொலிந்து விளங்கும் யாழ்ப்பாண மாநகரின் தாவடிப்பதியுறை என்னும் புண்ணிய ஷேத்திரத்தில் அருளாட்சி புரிந்த அருள் மிகு தாவடி ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி பெருமானுக்கு ஊர்கூடி கோவிலமைத்து குடமுழுக்காட்டுவிழா 02.07.2025 புதன்கிழமை ஆனி உத்திரம் நன் நாளில் முருக மூர்த்தி பெருமான் அருளோடு தாவடி தாணு வாசு தேவக்குருக்களின் குருவருளும் கைகூட நவகுண்ட மூர்த்திபர்களான சிவாச்சாரியப் பெருமக்களின் இறைபணியுடன் நவகுண்ட பஷ கும்பாபிஷேகத்தை சிறப்புற நடாத்தி வைத்தேன் **கும்பாபிஷேகம் கண்ட அடியவர்களுக்கும் எண்ணைக்காப்புச் சாத்தி முருகப்பெருமானை மகிழ்வித்த அடியார்கட்கும் பரிபாலன சபையினருக்கும் கிராம மக்கள் அனைவருக்கும் எனது அருளாசிகள் உரித்தாகுக.** நாட்டில் சாந்தி சமாதானம் நிலைத்து மும்மாரி பொழிந்து மக்கள் மன நிம்மதியோடு வாழ எல்லாம் வல்ல உலக நாயகனான ஸ்ரீ அம்பலவாண கந்தசாமி பெருமானை வேண்டி அமைக்கின்றேன்.

**கும்பாபிஷேக பிரதம குரு**
**பிரம்ம ஸ்ரீ.வாசு.ஜெயவஸ்த்தாங்க குருக்கள் தாவடி**

### திருப்பணிச் சபைத் தலைவரின் வாழ்த்துச்செய்தி



**"தாவடிப் பதியுறை மக்களின் குறை தீர்க்கும் அம்பலவாண முருகன்"** தாவடி ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி திருக்கோயில் மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல வள்ளி. தெய்வனை சமேத முருகப்பெருமானை வேண்டி நிற்கின்றேன். அத்துடன் கும்பாபிஷேக திருப்பணிச்சபை தலைவர் எனும் வகையில் கும்பாபிஷேக மலருக்கு வாழ்த்துரை வழங்குவதிலும் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். எமது ஆலயத்தில் இம்முறை நடைபெறும் மகா கும்பாபிஷேகமானது மூன்றாவது தடவையாக நடைபெறுகின்றது. அன்றைய காலம் முதல் இன்றைய காலம் வரை எமது தாவடியூர் மக்கள் அனைவரும் பெரும் நன்கொடைகள். தொண்டுகள். அர்ப்பணிப்புக்கள் போன்றவற்றின் மூலமாக எமது ஆலயத்தை வளர்த்துள்ளனர். **அன்றைய காலத்தில் சிறு கைத் தொழிலில் ஈடுபடுவோரும். விவசாயம் செய்தவர்களும். வர்த்தகம் செய்தவர்களும் சேர்ந்தே ஆலயத்தை கட்டி எழுப்பினார்கள். ஆனால் இன்று ஆலய வளர்ச்சிக்கு எமது கிராமத்தில் பிறந்து எங்கள் முருகனை வழிபட்டு தற்போது வெளிநாடுகளில் வசிக்கும் முருகன் அடியவர்களே பெரும் பங்களிப்பு புரிந்துள்ளார்கள். ஆலயத்தில் நடைபெற்ற அனைத்து திருப்பணிகளிலும் இவர்களின் பங்கு மிகப்பெரிது. எனவே இச் சந்தர்ப்பத்தில் திருப்பணி நிதி உதவி புரிந்து இக் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற உதவிய அனைவருக்கும் நன்றி கூற கடமைப் பட்டுள்ளோம்.** இக் கும்பாபிஷேக தினத்தில் தாவடி அம்பலவாண முருகப் பெருமானின் திருவருள் தாவடி மக்களுக்கு மாத்திரமன்றி உலக மக்கள் அனைவருக்கும் கிடைக்கப்பெற்று அத்தனை விக்கினங்களும் தீர்ந்து பேரின்ப பெருவாழ்வு சித்திக்க முருகனை பிரார்த்திக்கின்றேன்.

**இ.பரமேஸ்வரலிங்கம், முன்னாள் உப தவிசாளர்**
**வலி தெற்கு பிரதேச சபை, உடுவில்**

### பரிபாலன சபைத் தலைவரின் வாழ்த்துரை



**"அருவமும் உருவமும் ஆகி அநாதியாய் பலவாய் ஒன்றாய் பிரம்மம் ஆய் நின்றதோர் சோதி பிழம்பதோர் மேனி ஆகி கருணை கூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே ஒரு திரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய"** அந்த வகையிலே தாவடியூர் அம்பலவாணர் கந்தசுவாமி கோயிலில் குடிகொண்டு முருகன் அடியார்களுக்கு அருள்பாலிக்கும் முருகப்பெருமான் திருக்கோயிலின் மூன்றாவது புனருத்தாரன கும்பாபிஷேகப் பெரும் தினவிழா விசுவாவசு வருடம் 2025. ஆனித்திங்கள் 18ஆம் நாள் (2025.07.02) உத்தர நட்சத்திரத்தில் அமிர்த சித்த யோகத்தில் காலை ஏழு மணிக்கு நடைபெற இருப்பதால் **"ஆறிரு தடந்தோள் வாழ்க ஆறு முகம் வாழ்க வெற்பை கூரு செய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள் ஏறிய மஞ்ஞை வாழ்க யானை தன் அணங்கும் வாழ்க மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீரடியார் எல்லாம்"** என்று வாழ்த்துவதோடு முருகன் அடியார்கள் இக் கும்பாபிஷேக பெருந்தின விழாவை கண்டு களிப்பதோடு தினமும் எம்பெருமானை மெய்யன்போடு வழிபட்டு நலமுடன் நலவாழ்வு பெற்று நீண்ட ஆயுளுடன் வாழ்வீர்களாக என வாழ்த்துகின்றேன்.

**க. விநாயகமூர்த்தி**
**பரிபாலன சபைத் தலைவர், தாவடி ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி கோயில்**

### வாழ்த்துரை



அருள்மிகு தாவடி ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி கோயில் புனராவர்த்தன நவகுண்ட மஹா கும்பாபிஷேக பெரும் சாந்தி விழா தொடர்பான மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். **நூறு ஆண்டுகளைக் கடந்து நிலைகொண்டிருக்கும் இவ்வாலயம் தாவடி முருக மூர்த்தி கோவில் என சுருக்கமாக அழைக்கப்படும்.** பெருமைக்குரியதும். நீண்ட வரலாற்றைக் கொண்ட இந்த ஆலயத்தின் திருப்பணிகளிலும். புனர்நிர்மான வேலைகளிலும் ஊர்மக்கள் காட்டும் அக்கறை பாராட்டுக்குரியதாகும். இவ்வாலயத்தை புதுப்பொலிவுடன் திகழ வைத்த நிர்வாக சபையினருக்கு நாம் எல்லோரும் நன்றி தெரிவிப்பதற்கு கடமைப்பட்டுள்ளோம்.

மூர்த்தி. தலம். தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒழுங்கே அமையப்பெற்ற திருத்தலமாக அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி ஆலயம் விளங்குவது என்றுமே பெருமைக்குரியதாகும். மிகப் பிரம்மாண்டமான வீதி அமைப்பும் அதனைச் சுற்றி பெரிய மரங்களும் நிறைந்திருப்பது ஆலயம் மிக அழகாக காணப்படக் காரணமாகும். இவ்வாலயம் உள் வீதியை எவ்வளவு அழகினை கொண்டிருக்கின்றதோ அதேபோல் வெளிவீதியையும் அழகுடன் பொலிவுடன் திகழவைக்கிறது. சனாதன தர்மமெனப் போற்றப்படும் இந்துசமய மரபானது அநாதியானது என்பதை எல்லோரும் நன்கறிவர். வேத பாராயணங்கள், திருமுறைப்பாடல்கள். தோத்திரங்கள் என்பன இறைவனை துதிப்பதற்கும் பக்தியை வளர்ப்பதற்கும் உள்ளன. இத்தகைய வழியில் எமது முருகன் ஆலயம் காலத்துக்குக் காலம் புதுப்பொலிவு பெற்றுவருகின்றது. புதிய பிரம்மாண்டமான இராஜகோபுரம் ஒன்றுக்கு மேற்பட்ட தேர்கள். கைலாய வாகனம். அழகுமிக்க திருமஞ்சம் என்பன் ஆலயத்தின் பெருமையை பறைசாற்றி நிற்கின்றன. அருள்மிகு தாவடி ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி கோயிலின் வளர்ச்சியில் அடியார்களும். இளைஞர்களும் காட்டிவரும் அதீத அக்கறை கோயிலின் வளர்ச்சிக்கு அத்திவாரமாக அமைந்துள்ளது. இந்த முயற்சியில் தம்மை அர்ப்பணித்த அனைத்து அடியார்களுக்கும் எமது பாராட்டினைத் தெரிவிப்பதுடன் முருகன் திருவருளால் இவ்வாலயத்தின் அடியார்கள் அக்கறையுடன் திருப்பணிகளை மேற்கொள்ளும் இளைஞர்கள் எல்லோரும் வாழ்வில் வளம்பெற வேண்டுமென எல்லாம் வல்ல குலதெய்வமான முருகப்பெருமானை இறைஞ்சி நிற்கின்றேன்.

**பேராசிரியர் க.தேவராஜா, முன்னாள் பீடாதிபதி**
**முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்**

### வாழ்த்துரை



இலங்கையின் வடபாகத்தில் யாழ் மாவட்டத்தில் தாவடியம்பதி அருள்மிகு தாவடி ஸ்ரீ அம்பலவாண கந்தசாமி கோயில் புனராவர்த்தன நவகுண்ட சகித அஷ்டபந்தன சமர்ப்பண மகாகும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி விழா 02.07.2025 புதன்கிழமை ஆனி உத்தரத்தில் நடைபெற இருப்பது தாவடியம்பதி மக்கள் செய்த பெரும் புண்ணியமாகும். இவ்வாலயம் பழமையானதும் நூற்றாண்டு கண்ட ஆலயமாக காணப்படுகிறது. **பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் புனருத்தாரணம் மேற்கொள்ளும் ஆலய நிர்வாக சபையும் திருப்பணிச்சபையும் இணைந்து மேற்கொண்ட பெருமுயற்சியினால் ஆலயம் புதுப்பொலிவுடன் இருப்பதுடன் உள்வீதியில் தூண்கள் கலையம்சங்களுடனும். மூலாலயமும் பரிவார மூர்த்திகளும் புது அழகுடன் திகழ்கின்றது.** உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள முருகன் அடியார்களின் பெரும்பங்களிப்புடன் ஆலயம் வளர்ச்சி கண்டுள்ளது. மேற்படி கும்பாபிஷேக விழாவானது சிறப்பான முறையில் நடந்தேறவும் கலந்து கொள்ளும் முருகன் அடியார்கள் அனைத்து நலன்களும் வளங்களும் பெற்று ஆரோக்கியமாக வாழ்வதற்கும் முருகப்பெருமான் அருள்புரிய வாழ்த்துகின்றேன்.

**முத்துத்தம்பி. வேலாயுதபிள்ளை**
**முன்னாள் பிரதி அதிபர், கொக்குவில் இந்துக்கல்லூரி**

### வாழ்த்துச் செய்தி



இலங்கைத் திருநாட்டிலே புனித பூமியாம் யாழ்ப்பாணம் பிரதேசத்திலே தாவடி என்னும் புகழ்பூத்த ஊரிலே நெடுங்காலமாக எழுந்தருளியிருந்து அருள்பாலிக்கும் அருள்மிகு தாவடி ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி திருக்கோயில் புனராவர்த்தான நவகுண்ட சகித அஷ்டபந்தன சமர்ப்பண மகாகும்பாபிஷேக பெரும் சாந்திவிழா 02.07.2025 ம் திகதியன்று நடைபெறுவதற்கு திருவருள் கூடியுள்ளது என்பதனை அறிந்து மட்டற்ற மகிழ்வும் சாந்தியும் அடைகிறோம். திருக்கோயில் மகாகும்பாபிஷேக விழா சிறப்பாக நடைபெறவும் அதிலே கலந்து கொள்ளும் அடியவர்கள். அன்பர்கள் மற்றும் அன்பிற்கும் பக்திக்குமுரிய பெருமக்கள் அனைவரும் எல்லா நலன்களும் வளங்களும் பெற்று சிறக்கவும் தாவடி வாழ் மக்கள் மற்றும் அன்பர்கள் அனைவரும் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்திடவும் அருள்மிகு அம்பலவாண கந்தசுவாமியாரின் கருணையைப் பெற்று உயர்ந்திடவும் திருவருள் வேண்டி பிரார்த்தித்து வாழ்த்துக்கூறுகிறேன். **"பேரறியாத பெரும் சுடர் ஒன்று அதன் வேரறியாமை விளம்புகின்றேன்"** என்னும் வாக்கிற்கிணங்க ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமிப் பெருமானின் மகாகும்பாபிஷேக விழா நீண்டகாலத்தின் பின் நடைபெறத் திருவருள் நிறைந்துள்ளமை தாவடி மக்களின் பக்தி வழிபாட்டின் சிறப்பாகும். கந்தசுவாமிப் பெருமானின் கும்பாவிஷேக விழா மிகவும் சிறப்பாக இனிதே நிறைவேறவும் எல்லா மக்களும் ஆயுள். ஆரோக்கியம். ஐஸ்வரியத்துடன் வாழவும் எல்லாம் வல்ல ஸ்ரீ அம்பலவாண முருகப் பெருமானை மீண்டும் பிரார்த்தித்து வணங்கி வழிபடுவோமாக.

**கலாநிதி. கலைவாணி. இராமநாதன்**
**ஓய்வுநிலை பேராசிரியர், யாழ் பல்கலைக்கழகம்**

### அனுசரணை

**V.M.K ஜீவல்லரி**
80/03 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
021 222 2515 / 077 784 9369
கண்டி வீதி, சாவகச்சேரி
021 227 1616 / 077 784 9369



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## கோவிந்தன் மார்க்கண்டு

புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் வடக்கை வசிப்பிடமாகவும், விசுவமடு மேற்கு அதிசய விநாயகர் கோவிலடியை தற்போதய முகவரியாகவும் கொண்ட கோவிந்தன் மார்க்கண்டு அவர்கள் கடந்த (29.06.2025) ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோவிந்தன்-நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சோதியின் (மண்ணி) அன்புக் கணவரும், கந்தன்-சின்னி தம்பதியரின் அன்பு மருமகனும், காலச்சென்ற கந்தையா மற்றும் மாணிக்கம், செல்லக்கண்டு, தவராசா (கொலண்ட்) ஆகியோரின் சகோதரரும் புஸ்பமலர் (பாரதி மகாவித்தியாலய ஆசிரியர்), புஸ்பலதா(பிரான்ஸ்) அகியோரின் அன்புத் தந்தையும், கனிஸ்ரா (விசுவமடு மத்திய சன சமூகநிலைய நூலகர்), கலைவிழி (விசுவமடு மகாவித்தியாலய மாணவி), (எழிலன், தேநவர், சயந்தவி) (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2025) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விசுவமடு 12ம் கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 248 6390**

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 22 . 04 . 1972 | 01 . 07 . 2025 |



## தனிப்புலிசிங்கமுதலியார் மகாலட்சுமி (ஆச்சி)

காரைநகர் பூதரடைப்பை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கந்தர்மடம் யாழ்ப்பாணத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட தனிப்புலிசிங்கமுதலியார் மகாலட்சுமி அவர்கள் நேற்று (01.07.2025) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தனிப்புலிசிங்கமுதலியார்-அன்னலட்சுமி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், நாகேஸ்வரி (சுவிஸ்), சிவனேஸ்வரி (ஆசிரியர்-யா/ யாழ் இந்து ஆரம்ப பாடசாலை), கலியுகதேவி (லண்டன்), கலைச் செல்வி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், லோகதாசன் (சுவிஸ்), கருணாநிதி (பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர்-கிளிநொச்சிப் பிராந்தியம்), சர்வானந்தசிவம் (லண்டன்), கருணாகரன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், பைரவி (சுவிஸ்), பாரதி (சுவிஸ்), மயூரன் (யாழ் இந்துக் கல்லூரி), பிரவீனன் (யாழ் இந்துக் கல்லூரி), கஜானன் (லண்டன்), கபிலன் (லண்டன்), தேனுஜன் (கனடா), கிருத்திஜன் (கனடா), கனிசா (கனடா) ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.07.2025) வியாழக்கிழமை காலை 08.00 மணிக்கு யாழ்ப்பாணம் கந்தர்மடத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
077 305 2721 (சிவனேஸ்)
+0041 772172343 (வதனா)
+0044 7591913974 (கிளி)
+0014 163121984 (குஞ்சன்) (கலைச்செல்வி)

தகவல்:
**குடும்பத்தினர்.**

# கண்ணீர் அஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 27 . 06 . 1940 | 30 . 06 . 2025 |



## சின்னத்துரை தங்கராஜா

கொக்குவில் மேற்கு சொர்ணவடலியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை தங்கராஜா அவர்கள் கடந்த (30.05.2025) திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற துணைவியார் தங்கராஜா ருக்மணி, துணைவி தங்கராஜா இராஜேஸ்வரியின் அன்புக்கணவரும், சசிகரன், கிருபாகரன், ராஜ்குமார், கவிதா, கீர்த்திராஜ் ஆகியோரின் தந்தையும், சரத்ராஜ், தர்சிகா, கதீசன், ஹம்ஷிகா, லக்சாயினி, பிரகாசினி, கிசாலினி, ஜான்சன், தனுஜன், கிஷோன், அக்ஷா, கிசேன், காலஞ்சென்ற அர்ச்சனா ஆகியோரின் அன்புப் பேரனும், பாலகுமார், மலர்வாணி, மதிவதனி, கிருஷ்ணா, சசிதரா ஆகியோரின் மாமனாரும், ரியாஶ்ரீ, காவியஶ்ரீ ஆகியோரின் பூட்டனும், காலஞ்சென்றவர்களான பாலரத்தினம், யோகராஜா, இரத்தினசிங்கம் மற்றும் யோகம்மா, யோகரத்தினம், புஷ்பரத்தினம் (தேவி), விமலாதேவி, கமலாதேவி, விஸ்வரத்தினம் (குஞ்சன்), நகுலேஸ்வரன் (அப்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2025) புதன்கிழமை பிற்பகல் 01.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கொக்குவில் மேற்கு,**
**சொர்ணவடலி.**

தகவல்:
**குடும்பத்தினர்.**
**கிருபாகரன் (மகன்)-077 983 0363**
**ராஜ்குமார் (ராசன்-மகன்)-077 848 1034**

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20 . 04 . 1956 | 01 . 07 . 2025 |



## செல்வி மாரிமுத்து மகாலட்சுமி

**(ஓய்வு நிலை உப அதிபர் தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை சத்தியசாயி பாடசாலை மானிப்பாய்)**

தாவடி வடக்கு மாரிதோட்டத்தினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி மாரிமுத்து மகாலட்சுமி அவர்கள் நேற்று (01.07.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து-இராசம்மா தம்பதியரின் இளைய மகளும் அன்னலட்சுமி, சண்முகரத்தினம், குமாரசுவாமி, குமாரலிங்கம், கனகரத்தினம், பாலகுமாரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் மனோகரியின் உடன் பிறவாச் சகோதரியும், தர்மகுலசிங்கம், யசோதா, ஜெகதீஸ்வரி, ஜெஜகௌரி, உதயகுமாரி, சிவஞானசுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் சுதன், சுதாகரன், நிஷாந்தன், லக்ஷன், சிவறஞ்சினி, தக்ஷா, சஞ்சய், பகுதரன், ருத்திரி, தரணிபன், கஜானன் ஆகியோரின் பாசமிகு மாமியும் கோவர்த்தனன், நிஷாந்தன், பகீரதி, நேருஜா, லதானி, கோபிகா ஆகியோரின் அன்புச் சிறியதாயும் வர்ஸ்ணா, வனஜிற் கிஷானி, தருண், அபிசிறி, தர்ஸ்ணா, தக்ஷி, ஆயுஸ்மன், கோணேஸ், சுவாகன் ஆகியோரின் ஆன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (03.07.2025) வியாழக்கிழமை நண்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**வன்னியசிங்கம் வீதி,**
**தாவடி வடக்கு,**
**[illegible]**

**தகவல்: குடும்பத்தினர்**
**021 205 3107, 077 472 4076**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் ஆயுதமாக கச்சதீவு விவகாரம்!

## சரத் வீரசேகர தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 2

கச்சதீவு விவகாரத்தை இந்தியத் தரப்பு அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்தி வருகின்றது என்று முன்னாள் அமைச்சர் சரத்வீரசேகர குற்றஞ்சாட்டியுள்ளார்.

சரத் வீரசேகர தனியார் ஊடகமொன்று நேர்காணல் வழங்கியுள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கச்சதீவு இலங்கைக்குச் சொந்தமானது. எந்த வளமும் அற்ற அந்தத் தீவில் ஒரு தேவாலயம் உள்ளது. மீனவர்கள் தமது வலைகளை உலர வைப்பதற்கு அந்தத் தீவைப் பயன்படுத்தி வருகின்றனர். தமிழகத்தில் தேர்தல் நெருங்கும்வேளைதான் கச்சதீவு விவகாரம் இந்தியாவில் பேசுபொருளாக மாறும். அரசியல் இலாபம் தேடும் நோக்கிலேயே அது தொடர்பில் பேசப்படுகின்றது. இந்தியாவில் இருந்து நாளொன்றுக்கு 800 முதல் 900 வரையான இழுவைப் படகுகள் வருகின்றன. இதன்மூலம் எமது கடல்வளம் நாசமாகி வருகின்றது. பெரும் பொருளாதார இழப்பும் ஏற்படுகின்றது. எனவே, அத்துமீறிய மீன்பிடிக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்றார். (அ-ம-44)

### பின்னிப்...

யாழ்ப்பாணம் செம்மணி சிந்துப்பாத்தி புதைகுழி, 'மனிதப் புதைகுழியாக' நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவால் அறிவிக்கப்பட்ட பின்னர், தற்போது மேலதிக அகழ்வு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. நேற்றைய அகழ்வுப் பணிகளின்போதே, ஒன்றுடன் ஒன்று பிணைந்த நிலையில் மனிதச் சிதிலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. பிணைந்த நிலையில் சிதிலங்கள் இருப்பதால், நேற்றைய அவதானிப்புக்களை பட்டியலிடுவதும், கணக்கிடுவதும் சிரமமாக மாறியுள்ளது.

நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவின் கண்காணிப்பில், துறைசார் நிபுணரும் பேராசிரியருமான சோமதேவாவின் தலைமையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணி ஞா.ரணித்தா, சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினரும் அகழ்வுப் பணிகளின் போது முன்னிலையாகி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

### சட்டமருத்துவ...

களுடனும், சட்டமருத்துவ அதிகாரிகளுடனும் தனது அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார். கிருஷாந்தி கொலைவழக்கில் நீதிமன்ற நடவடிக்கைகளில் பிரதான பங்களிப்பை சட்டமருத்துவ அதிகாரி சிலிவ்போர்ட் பெரேரா வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

### இலங்கைக்கு...

இருதரப்பு வர்த்தகத்தில் பரஸ்பர வரிவிதிப்பை அமெரிக்கா அண்மையில் நடைமுறைப்படுத்தியது. எனினும், சில பொதுவான கோரிக்கைகளைத் தொடர்ந்து, அந்தத் திட்டத்தை அதிபர் ட்ரம்ப் தற்காலிகமாகக் கைவிட்டிருந்தார். இவ்வாறான பின்னணியிலேயே, வரிச் சலுகைக்கான அவகாசம் மேலும் நீடிக்கப்படாது என்று அவர் தற்போது கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமெரிக்கா எந்த நாட்டுடனும் வர்த்தகம் செய்வதற்குத் தயாராக உள்ளது. ஆனால், வரிச் சலுகைகளை வழங்கத் தயாரில்லை. அமெரிக்கர்களின் உழைப்பை இனியும் உலக நாடுகளுடன் பங்கிட முடியாது. எனவே, உலக நாடுகளுக்கான கட்டாய வரி விதிப்பு விரைவில் நடைமுறையாகும். சில வேளை 50 வீத வரிகளும் விதிக்கப்படும். வரிச் சலுகைகளுக்கான 90 நாள்கள் காலஅவகாசத்தை மேலும் நீடிக்கும் எண்ணம் இல்லை. குறிக்கப்பட்ட (இலங்கை உட்பட) 57 நாடுகளுக்குமான வரிச் சலுகைக்காலம் ஜூலை 9ஆம் திகதியுடன் முடிவடையும் - என்றார். (அ-ம-இ)

### படையினரைக்...

உள்ளதாக முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உணவு, மருந்து விநியோகங்கள் தடுக்கப்பட்டமை உட்பட இலங்கை தொடர்பான 8 போர்க்குற்றச்சாட்டுகள் போலியானவை என்பதை நாம் ஜெனிவா தொடரில் நிரூபித்துள்ளோம். உரிய வகையில் ஆவணங்களும் கையளிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஜெனிவாக் கூட்டத்தொடர் ஆரம்பமாகின்றது. இதன்போது இலங்கை தொடர்பான போர்க்குற்றச்சாட்டுகளை வெளிவிவகார அமைச்சு திட்டவட்டமாக நிராகரிக்க வேண்டும். ஜெனிவா விவகாரம் தொடர்பில் அனுபவமுள்ள அதிகாரிகள் வெளிவிவகார அமைச்சில் இருக்கின்றனர்.

எனினும், ஆனால் 46/1 தீர்மானத்தின் பாரதூரத்தன்மை தற்போதைய அரசாங்கத்துக்கு புரியவில்லைபோல் தெரிகின்றது. அரசாங்கத்துக்கு எதிராகச் சாட்சியங்களைத் திரட்டும் நடவடிக்கைகூட தற்போது இடம்பெறுகின்றது' - என்றார். (அ-ம-44)

### இளைஞரைக்...

மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் குறித்த இளைஞரை காரில் கடத்திச் சென்று குடியிருப்பு குளக்கட்டு பகுதியில் வைத்து தாக்கியுள்ளனர். அதன் பின்னர் அவரது ஏ.ரி.எம். அட்டையைப் பறித்தெடுத்து பின்னர், அதைவைத்து [illegible] கொள்ளையிட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட இளைஞர்கள் 19, 21 வயதுடையவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-110-18)

### கிணற்றில்...

தெற்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

கணேசராசா சுபாகரன் (வயது-42) என்ற குடும்பத்தலைவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரியான நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

### தவறான...

27ஆம் திகதி தவறான முடிவெடுத்து நஞ்சருந்தியுள்ளார். இதையடுத்து, மீட்கப்பட்ட அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரியான நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

### மின்சாரம்...

பிரதேசசபையின் ஊழியரே இவ்வாறு மயக்கமடைந்துள்ளார். இதையடுத்து, அவர் உடனடியாக மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். பாதுகாப்பு அங்கி போட்டிருந்தமையால், மின்சாரம் தாக்கித் தூக்கி எறியப்பட்டபோதும் அவர் உயிர் பிழைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26-66)

### அர்ச்சுனா...

பட்ட வழக்கில், அர்ச்சுனா எம்.பி.யின் சமர்ப்பணங்கள் இன்று முன்வைக்கப்படவுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் நாடாளுமன்ற உறுப்பினராகத் தொடர்ந்து பதவி வகிப்பதற்கான தகுதியை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் கடந்த மாதம் 26ஆம் திகதி விசாரணைக்காக எடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது, நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா, அரச மருத்துவ அதிகாரியாகப் பணியாற்றிக்கொண்டே பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனுவை தாக்கல் செய்தார் என்ற விடயம் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டிருந்தது. அரச தரப்பில் முன்னிலையான கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் சுமதி தர்மவர்த்தன, எம்.பி. அர்ச்சுனா இராமநாதன் தற்போதும் ஒரு பொது அதிகாரியாகக் கருதப்படுகிறார் என்பதை உறுதிப்படுத்தியிருந்தார். இதையடுத்தே, நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவின் சார்பில் முன்னிலையான வழக்கறிஞர்களின் சமர்ப்பணங்களுக்காக வழக்கு இன்று தவணையிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

### மன்னார்...

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மன்னார் மாவட்டக் கிளையின் பொருளாளர் தி.பரஞ்சோதி அந்தப் பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளருக்கு அவர் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் உள்ளதாவது:-

மன்னார் மாவட்டக் கிளையின் பொருளாளர் பதவியிலிருந்து நான் ராஜினாமா செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்டத் தலைமை கடந்த தேர்தலில் தன்னிச்சையாகச் செயற்பட்டதுடன், உள்ளூராட்சி சபைகளை அமைப்பதில் அலட்சியமாகச் செயற்பட்டமை, கட்சிக்கும் மன்னார் மாவட்டத்திலும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. அத்துடன், தற்போதைய மாவட்டத் தலைமையுடன் தொடர்ந்து பணியாற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மக்கள் மத்தியில் பல்வேறு வகையான விமர்சனங்கள் மற்றும் எதிர்ப்புகள் எழுந்துள்ளதால், தோல்வி மற்றும் பின்னடைவுக்கு தார்மீகப் பொறுப்பேற்று, பொருளாளர் பதவியில் இருந்து விலகுகிறேன் - என்றுள்ளது. (அ-ம-56)

### அனைத்து...

தரணி ரணித்தா ஞானராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான முன்னைய வழக்கும், தற்போதைய வழக்கும் வெவ்வேறான வழக்குகளாகக் காணப்படுகின்றன. எனினும், இரண்டு வழக்குகளையும் தொடர்புபடுத்த வேண்டிய தேவை இருப்பதால், அதற்காக நீதிமன்றின் முறையான அனுமதியைப் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இது தொடர்பான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன - என்றார். (அ-ம-26)

### புதைகுழிக்குள்...

பாடசாலைப் புத்தகப்பையோடு அடையாளம் காணப்பட்ட சிறிய பிள்ளையினுடையதாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படும் மனிதச் சிதிலத்துக்குக் கீழேயே அந்தப் பொம்மையும் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அத்தோடு சிறு பெண்குழந்தைகள் பயன்படுத்தும் காலணியும் இந்தச் சிதிலத்துக்கு அருக்கில் மீட்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர், கண்ணாடி வளையல்களும் அந்த மனிதப் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

### பேருந்துக்...

ஜூலை மாதம் 4ஆம் திகதி முதல் பேருந்துக் கட்டணத்தை 0.55 வீதத்தால் குறைக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் அந்த ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் உள்ளதாவது:-

2025ஆம் ஆண்டுக்கான வருடாந்த பேருந்துக் கட்டணத்தை 2.5 வீதத்தால் குறைப்பதற்கு அவதானம் செலுத்தப்பட்டிருந்தது. எனினும், எரிபொருள் விலைச் சூத்திரத்தின் அடிப்படையில் மாதாந்த எரிபொருள் விலைத் திருத்தத்துக்கு அமைய பேருந்துக் கட்டணத்தை 0.55 வீதத்தால் குறைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனினும், குறைந்தபட்ச கட்டணத்தில் எந்தவொரு திருத்தமும் செய்யப்படவில்லை. ஜூலை 4ஆம் திகதி நள்ளிரவு முதல் இந்தப் புதிய கட்டண அறவீடு நடைமுறைக்குவரும் - என்றுள்ளது. (அ-ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

யாழ் இந்து 54 வயது விவாகரத்தான மணமகனுக்கு மணமகள் தேவை. வெளிநாடுகளில் வசிக்கும் துணை இழந்த. விவாகரத்தான. அல்லது கணவனை பிரிந்து வாழ்பவர்களும் தொடர்பு கொள்ளலாம். மணமகன் வவுனியாவில் உயர் பதவி வகிப்பவர். பிள்ளைகள் உடையவர்களும் தொடர்பு கொள்ளலாம். வெளிநாட்டில் வசிப்பவர்கள் மாத்திரம் தொடர்பு கொள்ளவும்.

(CS/45406) J-1

Whats app: 070 280 2172



## மன். மாவட்டச் செயலர் நகர முதல்வர் சந்திப்பு

மன்னார், ஜூலை 2

மன்னார் நகர முதல்வர் டானியல் வசந்தன் நேற்றுமுன்தினம் மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு விஜயம் செய்து மன்னார் மாவட்டச் செயலர் க. கனகேஸ்வரனுடன் விசேட சந்திப்பை மேற்கொண்டார்.

இதன் போது மன்னார் நகர சபை பிரிவில் முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள், மன்னார் நகர சபை பிரிவில் கண்டறியப்பட்ட குறைகள், மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், முன்னெடுக்கப்பட உள்ள வேலைத்திட்டங்கள் குறித்தும் ஆராயப்பட்டது. (ச-56)

## பணியாளர் தேவை

உடுவில் பகுதியில் இயங்கிவரும் பிரபல தனியார் நிறுவனம் ஒன்றிற்கு அலுவலக பாதுகாப்பு உத்தியோகத்தர் மற்றும் தோட்ட பராமரிப்பு வேலை செய்யக்கூடிய ஒருவர் தேவை.

வயது எல்லை - 35

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 075 763 6911

## வேலையாட்கள் தேவை

கொழும்பில் அலுமினிய Fitting வேலைத் தலத்திற்கு அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை.

* Casement Windows
* 100mm Sliding Door
* Kitchen Cupboards

சுயமாக செய்யக்கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும்.

மாதச் சம்பளம் : 80,000/=

077 879 6620

## சைவ வித்தியா விருத்திச் சங்கம்
## உடனடி வேலை வாய்ப்பு

**01) நிர்வாக அலுவலர்**

இயக்குனர் சபையின் பரிபாலனத்தில் உள்ள எமது சங்கத்தின் நிர்வாக செயற்பாடுகளை நிர்வகிப்பதற்கும் சங்கத்தின் 3 சிறுவர் இல்லங்களின் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கும் தகுதியுள்ள அனுபவம் வாய்ந்த விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**நியந்தனைகள் / அனுகூலங்கள்**

✓ வயதெல்லை 40 - 65
✓ ஓய்வுபெற்ற அரச தனியார் நிர்வாக உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
✓ சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
✓ கணினி பயன்பாட்டு திறன் கொண்டிருத்தல்.
✓ கல்வித்தகைமை : க.பொ.த உயர்தரம் சித்தி அல்லது அதற்கு மேற்பட்டது.

**02) இலகு ரக வாகன சாரதி :**

**நியந்தனைகள் / அனுகூலங்கள்**

✓ வயதெல்லை 30 - 60
✓ ஆட்டோ, வான் ஆகியவற்றுக்கான சாரதி அனுமதிப்பத்திரம் இருக்கவேண்டும்.
✓ சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்
✓ கிராமசேவகர் நற்சான்றிதழ் அவசியம்

**03) விளையாட்டு பயிற்றுனர் (பெண்) :**

**நியந்தனைகள் / அனுகூலங்கள்**

✓ வயதெல்லை 25 - 45
✓ பாலினம் : பெண்கள் மட்டும்
✓ சம்பளம்: மணித்தியாலக் கொடுப்பனவு
✓ பகுதிநேர பணி
✓ கல்வித்தகைமை : க.பொ.த உயர்தரம் சித்தி அல்லது அதற்கு மேற்பட்டது.
✓ விளையாட்டுத்துறை டிப்ளோமா அல்லது உயர்டிப்ளோமா அவசியமானது.

உங்கள் சுய விபரக்கோவையினை 14.07.2025இற்கு முன்பதாக தபாலிலோ நேரிலோ சமர்ப்பிக்கவும். கடித உறையின் இடது பக்க மூலையில் விண்ணப்பிக்கும் பணியினைக் குறிப்பிடவும்.

த. தவரூபன்
செயலாளர்
சைவ வித்தியா விருத்திச்சங்கம்
கலாசாலை வீதி, திருநெல்வேலி
யாழ்ப்பாணம்
தொலைபேசி 021 222 6525.

CR 454091

## வேலைவாய்ப்புகள்

கிளாக், கிளீனர், சாரதி, வெல்டர், காப்பென்டர், பிளம்பர், வெயிட்டர், சமையலாளர்

074 083 3368, 077 773 3368

## காணியும் வீடும் விற்பனைக்கு

சாவகச்சேரியில் 4 பரப்பு காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 070 638 3609

## வேலையாட்கள் தேவை

சுன்னாகத்தில் அமைந்துள்ள புடவையகத்திற்கு வேலை தெரிந்த, பழக விரும்பும் பெண் வேலையாள் தேவை. (சுன்னாகத்தை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது)

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- 076 632 3554

## தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 20 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். 1 ஏக்கர் 15 இலட்சம்.

(CS/58593) J-1

தொடர்பு:-
Whatsapp:- 0044 740 537 3526

## காணி விற்பனைக்கு

மட்டுவில் தெற்கு 2 பரப்பு 11 குளியுடைய நுணாவில் சந்திக்கருகில் 150 Laks வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு

077 534 3697

Whats app: +140 5476 1531

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் அதிகார செல்லமுத்து வீதியில் (சங்கரப்பிள்ளை வீதிக்கு அருகில்) 16 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

➤ **1 பரப்பு - 55 லட்சம்**
➤ **விலை பேசித்தீர்மானிக்கப்படும்.**

தொடர்புகளுக்கு:

077 534 3697

Whats app: +140 547 61531

## வேலையாட்கள் தேவை

› மேசன் - Rs 3000.00 › வயறிங் - Rs 3000.00
› வெல்டர் - Rs 3000.00 › பெயின்ரர் - Rs 3000.00
› பிளமிங் - Rs 3000.00
› மேசன் உதவியாளர் - Rs 2500.00
› தச்சு வேலை (அனுபவமுள்ளவர்கள்) - Rs 3000.00

தேவைப்படின் தங்குமிடம், உணவு ஒழுங்கு செய்து தரப்படும்.

தொடர்பு :- 077 210 0749
(காலை 8.30 - மாலை 5.00 வரை)
யாழ்ப்பாணம்.

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூலை 2

தாவடி ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி திருக்கோவில் மஹாகும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழா இன்று புதன் கிழமை ஆனி உத்தர நன்நாளில் காலை 5.50மணி முதல் 6.55 மணிவரையுள்ள சுப முகூர்த்த வேளையில் முருகப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் குடமுழுக்கு நன்னீராட்டு விழா நடைபெறவுள்ளது. அனைவரையும் கலந்து சிறப்பித்து அம்பலவாண முருகப் பெருமானின் திருவருளைப் பெற்றுய்யுமாறு கும்பாபிஷேக திருப்பணிச் சபையினர் தெரிவித்துள்ளனர். (ச-41)

## சிரமதானம்

யாழ்ப்பாணம், ஜூலை 2

தொழிற்கல்விப் பிரிவுக்குச் சொந்தமான 311 நிறுவனங்களில் நாடளாவிய ரீதியில் 'தொழிலாளர் பணி' ஒழுங்கமைக்கப்பட்ட கவரக்கூடிய நிறுவன முறைமையை உருவாக்கும் சிரமதான நிகழ்வு பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள தொழினுட்பவியல் கல்லூரியில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது. (ச-41)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 2

அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 28ஆம் திகதி நிறைவடை யவுள்ளது. 26ஆம் திகதி சனிக்கிழமை இரவு சப்பறத் திருவிழாவும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த் திருவிழாவும் 28ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. மஹோற்சவ கால 15 நாள்களும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். உற்சவ தினங்களில் மாலை 5.45மணி வரை கூட்டுப்பிரார்த்தனையும், இரவு உற்சவம் நிறைவுபெற்றதும் அரியாலை இளைஞர் இந்துமா மன்றத்தின் ஆதரவில் சொற்பொழிவும் தேர்த்திருவிழாவன்று தேர் இருப்பிடத்தை அடைந்ததும் இசைக்கச்சேரியும் நடைபெறும். (ச-41)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.